# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

தனிச்சுற்றுக்கு
நன்கொடை
ரூ-20

ஜூலை-2015

பருவம் 1 புனல் 10


## பார்ப்பனப் பண்பாட்டுப் படையெடுப்பில்



காட்டாறு
அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

தொகுப்புக்குழு
யாழ் மொழி
பெரியார் செல்வி
பிரபாகரன் அழகர்சாமி
கணியூர் தமிழ்ச்செல்வன்
அ.ப. சிவா
கொளத்தூர் குமார்
செல்லையா முத்துச்சாமி
மே.கா. கிட்டு
பூ. மணிமாறன்

ஆசிரியர்
சி. இராவணன் 97868 89325

உரிமை & வெளியீடு
சி.விஜயராகவன்

சட்ட ஆலோசனைக்குழு
வழக்கறிஞர் க.ஜெயராஜ்
வழக்கறிஞர் வெ.பழனிச்சாமி
வழக்கறிஞர் பிரபாத்

விளம்பரத் தொடர்பு
சி. விஜயன் 94881 79109,
ஜீவாநகர் குமார் 99944 77013

விற்பனைத் தொடர்பு
ஆ. பாண்டியன் 96591 12891,
கடத்தூர் காந்தி 99428 76665
வெங்கட் 95788 44141

சந்தா தொடர்பு
அ. கிருட்டிணகுமார்
97882 97428

வடிவமைப்பு
Mukizh Media

அச்சு
செல்வக்குமார்
BS Graphics, Chennai

ஆக்கங்கள், விமர்சனங்களுக்கு
காட்டாறு, 1 / 810
முத்தமிழ்நகர், நத்தம் சாலை,
திண்டுக்கல். 624003
kaattaaru2014@gmail.com


## தீண்டாமை வன்கொடுமை எதிர்ப்புப்போராட்டங்களின்

# இலக்கு சரியானதா?

தமிழ்நாட்டில் தொடரும் ஜாதி ஆணவக்கொலைகளைக் கண்டித்து அனைத்து முற்போக்கு அமைப்புகளும் கண்டன ஆர்ப்பாட்டங்களையும், கண்டனக் கருத்தரங்குகளையும், பொதுக்கூட்டங்களையும் நடத்திவருகின்றன. நாமக்கல் கோகுல்ராஜ் படுகொலையில் அதை ஒரு கொலை வழக்காகப் பதிவுசெய்யவே கடும் போராட்டத்தை நடத்த வேண்டிய அளவுக்கு ஜாதி ஆதிக்கம் கடுமையாக உள்ளது.

ஜாதி ஆணவக்கொலைகளுக்கு எதிராகக் களமிறங்கியுள்ள திராவிடர் இயக்கங்கள், தலித் அமைப்புகள், பொதுவுடைமை இயக்கங்கள், சிறுபான்மையினர் அமைப்புகள் என அனைவருமே முக்கியமாக ஒரு சில கோரிக்கைகளை எழுப்புகின்றனர். அவையாவன,

- அரசு கவுரவக்கொலைகளைத் தடுக்கத் தனிச்சட்டம் இயற்றவேண்டும்.
- தமிழகம் முழுவதும் காவல்துறையில் பணியாற்றும் ஆதிக்க ஜாதிகளைச் சேர்ந்த காவல்துறை அதிகாரிகளை அந்தந்தப் பகுதிகளில் இருந்து உடனடியாகப் பணிமாற்றம் செய்யவேண்டும்.
- பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நட்டஈடாக 25 லட்சம் தரவேண்டும் அல்லது 50 இலட்சம் தரவேண்டும்.
- பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு அரசு வேலைவாய்ப்பு வழங்கவேண்டும்.
- ஜாதி மறுப்புத்திருமண இணையர்களுக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டும்.

என்பன போன்ற சில கோரிக்கைகள் முன்வைக்கப் படுகின்றன. மேற்கண்ட முழக்கங்களும் அவற்றுக்காகப் போராடுவதும் மிகவும் அவசியம். இதுபோன்ற போராட்டங்களில் நாம் அமைப்பு வேறுபாடுகள் கடந்தும்கூட பங்கேற்கவேண்டியது அடிப்படைக் கடமையாகும்.

அதேநேரத்தில் இதுபோன்ற முழக்கங்கள் மட்டுமே போதுமானவையா? இதுபோன்ற தனிச்சட்டங்களால், நிவாரணங்களால் ஜாதி ஆணவக்கொலைகள், தண்டவாளப் படுகொலைகள் முடிவுக்கு வந்துவிடுமா? படுகொலைகளை நடத்தும் ஜாதிகள் மட்டும்தான் இவற்றுக்குக் காரணமானவையா? ஜாதிமறுப்புத் திருமணங்களுக்கும், ஜாதி ஒழிப்பிற்கும் முதன்மையான எதிரிகள் அந்தந்தப் பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தும் ஜாதிகள் மட்டும்தானா? என்ற கேள்விகளும் எழுகிறது.

‘அரசு’ என்ற முறையே தோன்றாத காலத்திலேயே ‘ஜாதிமுறை’ அல்லது ‘வர்ணமுறை’ தோன்றிவிட்டது. இந்துமத வேதங்களிலேயே - சாஸ்திரங்களிலேயே வர்ணக்கலப்பிற்கும், ஜாதி கடந்த திருமணங்களுக்கும் எதிரான கருத்துக்கள் உருவாக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இந்துக்களின் புனித நூலாகக் கருதப்படும் பகவத் கீதையிலேயே ஜாதிக்கலப்பிற்கு எதிரான கருத்துக்கள் போதிக்கப்படுகின்றன.

பகவத்கீதையிலே கண்ணன், ஜாதிகளுக்கு அடிப்படையான நான்கு வர்ணங்களை தானே படைத்ததாகக் கூறுகிறான். "சாதுர் வர்ணம் மாயா ஸ்ருஷ்டம்" அதே பகவத் கீதையிலேயே அர்ஜுனன் போர் செய்ய மறுத்துப் பதறியபடி கூறுகிறான், "குடும்பத்தின் ஆணி வேறான பெண்கள் நெறி தவறினால், வர்ண குழப்பம் உண்டாகிறது. அப்படி வர்ண குழப்பத்தை ஏற்படுத்துவோர்க்கும், அப்படிப்பட்டக் குழம்பிய வர்ணத்தைச் சேர்ந்தவர்களுக்கும் நரகமே கிடைக்கும்." என்கிறான்.

ஜாதிகளைப் படைத்தது நான்தான் என இந்துக்களின் புனிதநூலிலேயே கிருஷ்ணனே பேசிவிட்டான். அதுபோல அர்ஜுனனும் ஜாதிமாறித் திருமணம் செய்தால் நரகம்தான் கிடைக்கும் என மிரட்டுகிறான். அதுபோல இந்துக்களின் பண்பாட்டை நிர்ணயிக்கும் மனுசாஸ்திரம் ஜாதிக்குள் மட்டுமே திருமணம் செய்ய வேண்டும் என வற்புறுத்துகிறது. ஜாதி மாறித் திருமணம் செய்வதோ, உறவு வைத்துக்கொள்வதோ கடும் குற்றமாகக் கருதி மரணதண்டனையைப் பரிந்துரைக்கிறது.

**"துவிஜர்கள் (பிராமணர், க்ஷத்திரியர்) முக்கியமாக திருமணம் செய்யும் போது தன் ஜாதியிலேயே செய்துகொள்ள வேண்டும்."**

*-மனுசாஸ்திரம் அத்தியாயம் 3, ஸ்லோகம் 12*

**"சூத்திரன் தன் ஜாதியில் மட்டுமே திருமணம் செய்துகொள்ள வேண்டும்."**

*-மனுசாஸ்திரம் அத்தியாயம் 3, ஸ்லோகம் 13*

**"பிராமணர்களும், க்ஷத்திரியர்களும் தன் ஜாதியில் பெண் கிடைக்காத ஆபத்துக்காலத்திலும் சூத்திரப்பெண்ணைத் திருமணம் செய்யக்கூடாது."**

*- மனுசாஸ்திரம் அத்தியாயம் 3, ஸ்லோகம் 14*

**"உயர்ந்தஜாதிக் கன்னிகையைப் புணர்ந்த தாழ்ந்த ஜாதியானுக்கு மரணதண்டனை விதிக்க வேண்டும். தன்ஜாதிக் கன்னிகையைப் புணர்ந்தவனுக்கு அவளது தந்தையின் சம்மதம் பெற்று திருமணம் செய்துவைக்க வேண்டும்."**

*-மனுசாஸ்திரம் அத்தியாயம் 8, ஸ்லோகம் 366*

இந்த நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சி வரும்வரை, புனிதநூலிலும், சாஸ்திரங்களிலும் கூறப்பட்ட விதிகளின் அடிப்படையில்தான் நீதிநிர்வாகம் நடைபெற்றுவந்துள்ளது. மெக்காலே என்ற ஆங்கிலேய நிர்வாகிக்குப் பிறகுதான் இந்தியாவில் மனுசாஸ்திரம், இந்து வேதங்கள், ஸ்ருதிகள், ஸ்மிருதிகளுக்குப் பதிலாக சட்டங்களும் நீதிமன்ற நடைமுறைகளும் உருவாக்கப்பட்டன. கி.பி. 1 ஆம் நூற்றாண்டிலிருந்து இந்த சாஸ்திரக் குப்பைகள் தான் நம்மை ஆண்டு வந்துள்ளன.

சுமார் 18 நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து நம்மீது திணிக்கப்பட்ட இந்து வாழ்வியல் முறையின் - இந்துப் பண்பாட்டின் தொடர்ச்சி தான் இந்த ஜாதி ஆணவக் கொலைகள். இவற்றை வெறும் சட்டங்களைப்போட்டு மட்டும் நிறுத்தி விட முடியமா? இந்துமத அழிவில், இந்து மதத்தின் சாஸ்திர, சம்பிரதாயங்களின் அழிவில் தான் ஜாதி ஆணவக்கொலைகள் உள்ளிட்ட அனைத்து வன்கொடுமைகளும் ஒழியும் என்பதைப் புதிதாக நாம் கண்டுபிடித்துச் சொல்லவேண்டியதில்லை.

அப்படியானால் இளவரசன், கோகுல்ராஜ் போன்றவர்களின் படுகொலைக்கு எதிரான போராட்டங்களில் முதன்மை எதிர்த்தளமாக இந்துமதமும், இந்துமத வேத - சாஸ்திரங்களும், பகவத்கீதையும் அடையாளப் படுத்தப்பட வேண்டும். முதன்மை எதிரிகளாக இந்து வேத - சாஸ்திரங்களை நம்மீது திணித்துக் கொண்டிருக்கும்-ஒரு நிறுவனமாக இவற்றைச் செயல்படுத்திக் கொண்டிருக்கும் 'பார்ப்பனர்கள்' அடையாளப்படுத்தப்பட வேண்டும்.

இப்படி முதன்மை எதிரிகளான பார்ப்பனர்களை அடையாளப்படுத்துவது கூட இல்லாமல் நடக்கும் போராட்டங்களால் நாம் என்ன சாதித்துவிட முடியும்? போராட்ட வடிவங்கள் எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். வடிவங்களைப்பற்றி இங்கு விவாதிக்கவில்லை. போராட்டங்களுக்காக நாம் முன்வைக்கும் முழக்கங்களில் பார்ப்பன எதிர்ப்பு, இந்துமத எதிர்ப்பு என இரண்டும் அவசியம் இருக்க வேண்டுமல்லவா?

முதன்மை எதிரிகளும் முதன்மை எதிர்முகாமும் ஒவ்வொரு ஜாதி ஒழிப்புப் போராட்டத்திலும், ஒவ்வொரு தீண்டாமை வன்கொடுமை எதிர்ப்புப் போராட்டத்திலும் அடையாளப்படுத்தப்பட வேண்டுமல்லவா? அண்மைக் காலமாக சில திராவிடர் இயக்கங்களே அதைச் செய்யத் தவறியுள்ளன என்பதுதான் வேதனையான உண்மை. என்.ஜி.ஓக்களும், ஜாதிய வன்கொடுமைகளில் பார்ப்பனஆதிக்கத்தை மறைக்கப்பாடுபடுபவர்களும் நடத்தும் போராட்டங்களின் முழக்கங்களுக்கும், பெரியாரிய அமைப்புகள் நடத்தும் போராட்டங்களின் முழக்கங்களுக்கும் வேறுபாடே இல்லாத ஆபத்தான நிலை உருவாகியுள்ளது என்பதைத் தோழமையுடன் சுட்டிக்காட்டுகிறோம்.

# நேரிடையாக கிராமப்புறப் பிரச்சாரம்

## மடத்துக்குளம் மோகனின் நிகழ்வுகளில் இருந்து

கண்காட்சியில் எனது உறவினர் - என்னை சந்தித்து ஏம்பா அப்பா இறந்து விட்டார் என்பதை உன்னிடம் சொல்ல நாங்க நான்கு, ஐந்து நாட்களாக முயற்சி செய்தும் நீ இருக்கிற இடம் கூடத் தெரிய வில்லை என சங்கடத்தோடு பேசினார் நான் அமைதியாக அவருடன் என் தாயின் ஊரான இராமநாதபுரம் மாவட்டம் அருகே திரு.உத்திரகோசமங்கை என்ற ஊருக்கு சென்றேன். அங்கே சென்ற பின் வழக்கமாக எல்லாக் குடும்பங்களிலும் நடைபெறுவது போல எனது உறவினர்கள் - இறப்பு தொடர்பாக சடங்குகள் செய்ய வேண்டும் எனக் கூடிப்பேசி ஒரு முடிவுக்கு வந்திருந்தனர்.

**செய்தியாளர்: சாஸ்திர சம்பிரதாயங்கள் குடும்பச் சூழலில் உங்கள் நிலை எப்படி?**

எனது தாயாரின் ஊர் புகழ்பெற்ற பண்டைக்காலத்து சிவன் கோயில்கொண்ட ஊர், மாணிக்கவாசகர் கடவுளுக்கு (சிவனுக்கு) அறையில் பாடல் பாடியதாக கதை சொல்லும் ஊர். அப்படி என்றால் சாஸ்திர சம்பிரதாயங்கள் எப்படி இருக்கும் நீங்களே யோசியுங்கள் ..

தி.மு.க வில், தி.க குடும்பத்தில் யாராவது இந்தச் சூழ்நிலை ஏற்பட்டால் ஊருக்குத் தான் உபதேசம், இவர்கள் வீட்டுக்கு இல்லை எல்லாம் நடக்கிறது எனக் கூறி என்னிடம் நண்பர்கள் விவாதம் செய்தது உண்டு. அப்படிச் செய்தபோது எல்லாம் நான் ஆணித்தரமாக விவாதம் செய்வது, பெரியார் கொள்கையை ஏற்றுக்கொண்ட இளைஞரிடம் சொல்வது

பெரியார் கொள்கையை ஏற்று நடக்கும் போது சோதனை உண்டாகும். அது ஒன்று தொண்டனின் திருமணம் அல்லது வீட்டில் ஏற்படும் தாய், தந்தையின் இறப்பு போன்ற நிகழ்வு நேரிடும்போது கொள்கைக்கு ஏற்பட்ட சவால் அல்லது பரீட்சை என எடுத்துக்கொண்டு போராட வேண்டியே உள்ளது. சொந்தம், உறவினர் மூளையில் பதிவான செயல் சடங்குகளும், சாஸ்திரங்களும் தான். இந்தச் சவாலில் எதிர் நின்று வெற்றி பெற்றால்தான் பெரியார் என்னும் பல்கலைக்கழகத்தில் நுழைவுத் தேர்வு எழுதத் தகுதியானவன் என்பேன்.

அந்தச் சவால் எனக்கே நேர்ந்தது. எனது தாயாரின் ஊரின் வழக்கப்படி, சேதுக்கரை என்னும் கடற்கரைப் பகுதியான, புராண இதிகாசத்தில் இராமர் நின்று - இலங்கை நோக்கி சீதையைத் தேடிய இடம் இதுதான் என இன்றும் மீனவர்கள் கூறிக் கொண்டிருக்கும் பகுதியாகும்.

மீனவர்கள் படகில் அந்தப்பகுதிக்கு வரும் பக்தர்களைக் கடலில் சிறிது தூரம் அழைத்துச் சென்று தண்ணீருக்குள் தெரியும் பவளப்பாறைத் திட்டுகளில் இதோ “இராமர்பாதம்” தெரிகிறதா எனக் கூறும் நிகழ்வு இன்றும் நடைபெறுகிறது. இந்த இடம் வைதீக, சாஸ்திர, சடங்குகள் செய்யும் ஆன்மீகக் கடற்கரை ஆகும்.

இந்த இடத்தில் என் குடும்பத்தின் உறவினர்கள், என் உடன்பிறந்த சகோதரர்களை வைத்து மொட்டை அடிக்க வைத்து, பார்ப்பனர்களை வைத்து நடத்தும் நிகழ்ச்சி என புரிந்து கொண்டேன். நாங்கள் அண்ணன் தம்பி 5 பேர். சடங்கு நிகழ்ச்சி தயார் ஆனது. எனது தந்தை இறந்து விட்டார் எனக்கு வருத்தம் தான். அதற்காக இந்தச்சடங்கு போன்ற நிகழ்வு எனக்கு உடன்பாடு இல்லை என்று கூறியதும், உறவினர்களிடம் சிறு சலசலப்பு. என்னைச் சமாதானம் செய்ய முயற்சியும் நடைபெற்றது. இறுதியில் நீ “மொட்டை” அடிக்க வேண்டாம் மீசையாவது எடுத்துக்கொள் என்றார்கள். நெருக்கடி தொடர்ந்தது. நான் மிகத் திடமான முடிவு எடுத்தேன். சரி. எனது தந்தை இறப்பில் நீங்கள் உறவுகள் இருக்கின்றீர்கள் - இந்தப் பார்ப்பனர் எதற்கு? அவரைப் போகச் சொல்லுங்கள், நான் உங்கள் சொல்படி நடக்கிறேன் என்றேன்.

**செய்தியாளர்: அப்போது உங்கள் மன நிலை எப்படி இருந்தது?**

*நான்: தெளிவான மனநிலையில் திடமாக, பார்ப்பனரை வைத்துச் செய்யும் எந்த நிகழ்வுகளும் கூடாது எனக் கூறினேன். ஆனால் சாஸ்திரம் என்னும் மடமை வென்றது உறவுகள் தோற்றனர். என்னைத் தவிர்த்து அனைத்து நிகழ்வுகளும் நடைபெற்றன. சடங்குகள் குறித்து சிலர் கொடுத்த நெருக்கடியின் போது, எனது சின்ன மாமா அவர்கள் தி.மு.க தலைவர் கலைஞர் மீது "வெறி" கொண்டவர் அவர். சற்று கோபமாக எவனோ செய்யும் சாஸ்திர சடங்குளை ஏற்றுக் கொண்ட நீங்கள் அவன் (நான்) கொள்கையில் ஒரு செயலைக் கூட ஏற்க நீங்கள் தயார் இல்லை என கடுமையாகப்பேசியதும் சலசலப்பு ஓய்ந்தது.*

*நான் மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன். பார்ப்பான், சாஸ்திரம், சம்பிரதாயம் இதை எதிர்த்து விட்டோம் என மனதோடு, நான் ஏதோ பெரிய வெற்றி பெற்றுவிட்டது போல் மிகுந்த உறுதியான மனநிலையில் இருந்தேன்.*

**செய்தியாளர்: தந்தையாரின் இறப்புச்சடங்கு நிகழ்வுக்குப்பின் உங்கள் இயக்க தொடர்புகள் பற்றிக் கூறுங்கள்?**

*நான் ஏற்கனவே சொன்னது போல் பொள்ளாச்சி தி.க.தோழர்கள் அனைவரும் தொழிலாளர்கள். நான் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்தேன். ஒவ்வொறு ஞாயிறு அன்றும் காலை 10 மணிக்கு பொள்ளாச்சியில், மெட்ராஸ் ஹோட்டல் என்ற இடத்தில் இருந்து தி.க.கொடியுடன் வரிசையாக கையில் துண்டறிக்கை, பெரியார் நூல்கள் ஆகியவற்றை விற்பனைக்கு எடுத்துக் கொண்டு, நடைப் பயணமாகப் பொள்ளாச்சியின் அருகே உள்ள கிராமங்களுக்குப் பிரச்சாரப்பயணம் செல்வோம். கட்டாயம் கருப்பு சட்டை, வெள்ளை பேண்ட் அணிய வேண்டும் என்ற கட்டுப்பாடோடு, செல்ல வேண்டிய கிராமத்திற்கு இடையில் உள்ள ஊர்களுக்கு (கிராமங்களுக்கு) சென்று பெரியாரின் கொள்கை, தமிழ்நாட்டின் உரிமைகள், சமூகநலன் கொண்ட கல்வி, வேலை வாய்ப்புக்கான இடஒதுக்கீடு பற்றிய செய்திகளை நாங்கள் ஒவ்வொருவரும் ஒரு தலைப்பாக எடுத்துக்கொண்டு அதைத் தெருமுனைப் பிரச்சாரமாக பேசுவோம்.*

*அதாவது, அய்யாவின் பேச்சு, கொள்கை மற்றும் அய்யாவின் இயக்கம் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு பெரியார் ஆற்றிய பணிகள் என்ன? என்று, தோழர் பொள்ளாச்சி விஜயராகவன் பேசுவார். திராவிடர் கழகத்தின் போராட்ட வடிவங்கள், தமிழ்நாட்டின் உரிமைகள், அய்யாவின் போராட்ட வரலாறு ஆகியவற்றை தோழர் இரா.மனோகரன் பேசுவார். நான் கடவுள், மூடநம்பிக்கை பற்றிப் பேசுவேன். இப்படியாக எங்கள் பிரச்சாரம் செல்லும் வழியில் மதிய உணவு, அந்தப் பகுதியின் தி.மு.க அல்லது நமது இயக்கத் தோழர்கள் வழங்குவார்கள்.*

**இந்தச் சவாலில் எதிர் நின்று வெற்றி பெற்றால் தான் பெரியார் என்னும் பல்கலைக்கழகத்தில் நுழைவுத் தேர்வு எழுதத் தகுதியானவன்**

*அதன் பின் மதியம் மீண்டும் பிரச்சார பயணம் தொடர்ந்து, மாலை சுமார் 6 மணிக்கு இறுதியான கிராமத்திற்குச் சென்று, அங்கே தெருமுனையில் மூடநம்பிக்கை ஒழிப்பு நிகழ்ச்சி, தீச்சட்டி எடுத்தல் போன்ற செய்முறை விளக்கங் களைச்செய்து அதன் பின் பொதுக்கூட்டம் போல் நடைபெறும்.*

*இப்படிப் பிரச்சாரம் செய்யும் வாரங்களில் ஒரு முறை, ஆனைமலை என்ற ஊரில் நிகழ்ச்சி நடத்திக்கொண்டு இருந்தோம். ஆனைமலை என்ற ஊர், தீக்குண்டம் நடத்தும் திரவுபதி அம்மன் கோவில், மாசாணி அம்மன் கோவில் உள்ள ஊர் ஆகும். இந்தக் கோவில் பகுதி ஜாதி ஆதிக்கம் நிறைந்த பகுதியும் கூட. சமுதாயத்தில் தொட்டால் தீட்டு, ஏன்? பார்த்தாலே தீட்டு என இந்து தர்மம் கூறும் இன்றும் அறியாமையால் தன்னிலை அறியாத 'இந்து' சகோதரர்கள் மற்றும் விவசாயக் கூலித் தொழிலாளர்கள் நிறைந்த பகுதியாகும்.*

*இந்த ஊரில்தான் அய்யாவின் காலத்தில் ஜாதி ஒழிப்புப்போராட்டம், சட்ட எரிப்புப் போராட்டம் நடைபெற்ற நமது இயக்கத்தின் முன்னோடிகள், தோழர்கள் அய்யா. ஆறுமுகம், நரசிம்மன் அய்யா, ரைஸ்மில் அனிபா போன்ற பெரியார் காலத்து இயக்க முன்னோடிகள் வாழ்ந்த ஊர். அவர்கள் நாங்கள் நடத்தும் தெருமுனைப் பிரச்சாரத்தை பார்த்து, பெரியாரின் கொள்கை எந்தக் காலத்திலும் எவராலும் அழிக்க முடியாது. உங்களைப் பார்த்தால் எங்களுக்கு மனநிறைவாக உள்ளது என்று கூறி இரவு உணவு வழங்கினார்கள். எனக்கு இந்த இயக்கத்தில் பெரியதாக நான் சாதித்ததாக நினைத்து மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். உடன் இருந்த தோழர்கள் அனைவரும் இந்த நிகழ்ச்சியை புதிய வழிமுறையுடன் தொடர வேண்டும் என யோசனை செய்தனர்.*



*கடவுளர் படை இருக்க, எல்லையில் காவற்படையினர் ஏன்?*

**வீ.பிரபாகரன்**-*தமிழ் இளைஞர்கள் மாணவர்கள் கூட்டமைப்பு*

# நாம் என்ன படிக்க வேண்டும் என்பதை கார்ப்ரேட் கம்பெனிகள் தான் தீர்மானிக்கின்றன



தமிழ்நாட்டில் அண்ணா பல்கலை கழகத்தின் அங்கீகாரத்துடன் இயங்கும் தனியார் பொறியியல் கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை 641. இந்த 641 கல்லூரிகளில் கிட்டத்தட்ட எல்லாக் கல்லூரிகளிலும் CSC மற்றும் IT பாட பிரிவுகள் உள்ளன.

சுமார் 480 - கல்லூரிகளில் ECE மற்றும் EEE பாடப் பிரிவுகள் உள்ளன.

CSE க்கும் IT க்கும் ஒன்றும் பெரிய அளவில் வித்தியாசங்கள் கிடையாது, வெறும் 8 பாடத் தாள்கள் மட்டுமே மாறும். மற்றபடி மற்ற பாடத்தாள்கள் அனைத்தும் ஒன்றாக தான் வரும்.

ECE, EEE, IT, CSC இவை நான்கும் வெவ்வேறு துறைகளாக இருந்தாலும், எப்படி ஆறு, கால்வாய், ஓடை, ஏரி என அனைத்தும் கடைசியில் கடலில் சென்று கலக்கிறதோ, அதே போல் இந்த நான்கு துறைகளில் தேர்ச்சி பெற்று வரும் பொறியாளர்கள் அனைவரும் வேலை வாய்ப்பு என்று வரும்பொழுது கடைசியில் IT மற்றும் ITe's வேலைக்கு தான் செல்கிறார்கள்.

இதில் நாம் கவனிக்கப்படவேண்டிய செய்தி என்னவென்றால், அனைத்துக் கல்லூரிகளிலும் CSE, IT பாடப்பிரிவு இருக்கிறது. 480 க்கும் மேற்பட்ட கல்லூரிகளில் ECE, EEE இடம்பெற்றிருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டின் முதல் முதலில் (1859)ம் ஆண்டு துவங்கப்பட்ட CIVIL ENGINEERING துறை இப்பொழுது வெறும் 87 கல்லூரிகளில் மட்டுமே உள்ளது.

Civil Engineering படித்த மாணவர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நல்ல வேலை வாய்ப்புகள் இருந்தும் Civil Engineer களுக்கான தட்டுப்பாடு நாடு முழுவதும் நிலவும் சூழல் இருந்தும், இதர 550 + கல்லூரிகளில் மாணவர் களுக்கு அந்தப் பாடப் பிரிவை தர இந்தக்கல்லூரி நிர்வாகங்களும் அரசாங்கமும் முன்வரவில்லை. ஏன் ??

சரி Civil Engineering' ஐ விடுவோம், Automobile Engineering, Production Engineering, Printing Technology, Textile Technology, Bio Technology, Bio Medical, Architecture, Industrial Management, Food Technology, Polymer Technology, Robotics, Mechatronics, Petroleum Engineering, Chemical Engineering இது போன்ற வேலைவாய்ப்புடன் கூடிய அறிவுசார்ந்த என்ஜினீயரிங் படிப்புகள் அனைத்தும் விரல்விட்டு என்னும் அளவில் மிக சொற்பமான கல்லூரிகளிலே உள்ளன.

மேல் சொன்ன படிப்புகளில் பல உற்பத்தி மற்றும் ஆராய்ச்சிக்கான படிப்புகள். இவை மற்ற கல்லூரிகளில் இடம்பெறாததற்கும் காரணமும் அதுவே. இந்த TATAகளும் BillGates களும் நடத்தும் IT பெரும் நிறுவனங்களுக்கு மேல் சொன்ன இந்தப் படிப்பு எல்லாம் பயன்படாது.

எனவே ஒப்புக்கு 33 எஞ்சினீயரிங் பாடப் பிரிவுகளை நம் கண்ணில் காட்டிவிட்டு. அந்தக் குறிப்பிட்ட நான்கு துறைகளை மட்டும் பெருமளவில் கல்லூரிகளில் வைத்திருக் கிறார்கள், அவர்களுக்குத் தேவையான

பயிற்சியை கல்வி என்ற பெயரில் நம்மீது திணிக்கிறார்கள். இந்தத்திணிப்பு நடவடிக்கைகள் 11வது படிக்கும் பொழுதே பெரிய அளவில் பாடத்திட்டத்தில் பிரதிப்பலிப்பதாக இருக்கிறது.

என் சொந்த அனுபவத்தில் இருந்து சொல்கிறேன். நான் 11 ஆம் வகுப்பு சேரும் பொழுதே எனக்கு தெரியும் நான் கம்ப்யூட்டர் இன்ஜினியர் ஆக போவது இல்லை என்று. ஆனால் அப்பொழுது C,C++,HTML போன்ற Computer software பாடங்களை வேலைக்கும் வாழ்க்கைக்கும் பயன்படாது என்று தெரிந்தே வேறு வழியில்லாமல் படித்தேன். என் மேல் அது திணிக்கபட்டது. காரணம் இந்த கார்ப்ரேட் கம்பனிகளுக்கு அது தேவைப்பட்டது.

இந்த IT கம்பனிகளுக்குத் தேவையான பாடங்களை நம் மீது திணிக்கும் இந்த நடவடிக்கைகளுக்காகத் திட்டமிட்டே நம் பாடத்திட்டங்களிலும் கல்வி முறைகளிலும் இந்த ஏகாதிபத்திய அரசாங்கத்தால் கொண்டுவரப் பட்ட மாற்றங்களை இன்னும் உற்று கவனித்தால் இந்த சூழ்ச்சி புரியக்கூடும்.

தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான பொறியியல் கல்லூரிகள் 1997க்கு பிற்பாடு துவங்கபட்டவை. 1997க்கு முன்னாள் வெறும் 66 பொறியியல் கல்லூரிகளே இருந்திருக்கிறது. 1997க்கு பிறகு திடீரென 580+ க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் துவங்கப்படுவதற்கான அவசியம் என்ன?

1996 ல் தான் இந்த கார்ப்ரேட் IT கம்பெனிகள் இந்தியாவில் தொழில் துவங்குவதற்கான ஒப்பந்தம் இந்த பெரும் முதலாளிகளின் நலனுக்காக கையெழுத்தாகிறது. இதற்கு ராஜீவ் காந்தி காலத்தில் கல்வி முறையில் மாற்றம் செய்யப்பட்டு புதிய கல்விக் கொள்கை கொண்டுவரப்பட்டது.

தற்பொழுது நடக்கும் நிகழ்வுகளையும் கல்விமுறைச் சீர்கேட்டையும் பார்த்தால், மேல் குறிப்பிட்டிருக்கும் இந்த மூன்று நிகழ்வுகளுக்கு ஒன்றுக்கு ஒன்று தொடர்புடையாகவே தோன்றுகிறது.

அமெரிக்காவில் ஓராண்டிற்கு உற்பத்தியாகும் எஞ்சினீயர்களின் எண்ணிக்கை வெறும் 70ஆயிரம் தான். ஐரோப்பிய ஒன்றியம் முழுவதையும் சேர்த்து வெறும் 1 லட்சம் பொறி யாளர்கள் தான் ஓராண்டிற்கு உருவாகுகிறார்கள். ஆனால் இந்தியாவிலோ ஆண்டிற்கு 15 லட்சம் பொறியாளர்கள் உருவாக்கப்படுகிறார்கள். இது அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் ஓராண்டிற்கு உருவாக்கும் பொறியாளர்களின் கூட்டுத்தொகையை காட்டிலும் மிக அதிகம்.

இவ்வளவு பொறியாளர்கள் உற்பத்தியாவதால் நாட்டின் பொருளாதாரம் உயர்கிறதா என்று பார்த்தால் அதுவும் கிடையாது. பொறியியல் படித்துவிட்டு வேலை செய்பவர்களை இரண்டாக பிரிக்கலாம்

1. Service Sector (IT & ITe's)

2. Manufacturing Sector

முதல் சொன்ன இந்த Service IT Sector ன் கீழ் தான் பெரும்பான்மையான இந்தியப் பொறியாளர்கள் வேலை செய்கிறார்கள். இவர்களின் உழைப்பால் அமெரிக்காவும், இங்கிலாந்தும் மற்றும் இவர்கள் பணிபுரியும் பெரும் நிறுவனங்களும் தான் வளர்கிறதே தவிர இவர்களால் நம் நாட்டிற்கு பெரிய வளர்ச்சி இல்லை.

அதிக அளவில் மாணவர்கள் இஞ்சினீயரிங் துறையை எடுத்து படிப்பதால் நாடு வளர்கிறது என்று சிலர் சொல்கிறார்கள். அப்படி பார்த்தால் ஆண்டிற்கு 2 லட்சத்திற்கும் மேல் பொறியாளர் களை உருவாக்கும் BIHAR மற்றும் Jharkhand மாநிலங்கள் ஏன் இன்னும் நாட்டிலே பின் தங்கிய மாநிலங்களாக உள்ளது என்ற கேள்வி நமக்குள் எழுகிறது.

உண்மையில் பெரும்பான்மையான பொறியாளர்கள் தங்கள் தற்சார்பே பூர்த்தியாகாத நிலையில் தான் வாழ்கிறார்கள். வெறும் 20 % பொறியாளர்கள் தான் நல்ல வேலையில் நல்ல ஊதியத்தோடு வேலையில் இருக்கிறார்கள். 31 % பேர் வேலை இல்லாமலும் மற்றவர்கள் குறைந்த சம்பளத்திற்கு வேலை செய்வதாக சமீபத்திய புள்ளிவிவரம் நமக்கு கூறுகிறது.

சொல்லபோனால், அமெரிக்காவின் வளர்ச்சிக்கும், இங்கிலாந்தின் வளர்ச்சிக்கும், பன்னாட்டு முதலாளிகளின் வர்க்க நலனிற் காகவும், இந்த தரகு முதலாளிகளிடம் கூலித் தொழிலாளிகளாக இந்த நாட்டின் மனித வளம் பாழாக்கபட்டுக்கொண்டிருக்கிறது.

இந்த கார்ப்ரேட் IT கம்பெனிகளுக்கு பெருமளவில் ஆட்கள் தேவை என்பதற்காக நம்மீது இந்தப் பாடத்திட்டங்களைத் திணித்து, குறிப்பிட்ட சில துறைகளுக்கு மட்டும் போலியான தட்டுபாட்டை உருவாக்கி அந்த மாயையை மக்களிடம் உண்டாக்கி எல்லாக் கல்லூரிகளிலும் குறிப்பிட்ட அந்த சில துறைகள் மட்டும் இருக்கும்படிச் செய்த மக்கள் விரோத அரசாங்கம் இந்த தரகு வேலையை தவிர்த்துவிட்டு, Printing Technology படிப்பை ஊக்கு வித்திருந்தால் குட்டி ஜப்பான் என்றழைக்கப் படும் நமது சிவாகாசி அச்சு மற்றும் காகித



எல்லாம் அவன் செயல் என்றால் புயலும், வெள்ளமும் எவன் செயல்?

உற்பத்தியில் ஜப்பானுக்கு(டோக்க்யோ, டோகுஷிமாவுக்கு)போட்டியாக வளர்ந்திருக்கும்.

*Textile Technology* படிப்பை ஊக்குவித்திருந்தால் திருப்பூர் இன்னும் சிறப்பாக முன்னேறியிருக்கும். சுய தொழில் துவங்கும் தமிழ் முதலாளிகள் பெருகி இருப்பார்கள். தற்பொழுது தமிழ் நாட்டில் இருந்து பெரும் அளவில் பருத்தி ஏற்றுமதி ஆகி பிறகு ஏதோ ஒரு நாட்டில் அது நூலாகவும் ஆடையாகவும் மாற்றப்பட்டு பின் நமக்கே இறக்குமதி செய்யப்பட்டு பல மடங்கு மதிப்புகூட்டபட்டு பின் நமக்கே விற்கப்படும் நிலை மாறி இருக்கும்.

*Chemical Engineering,BioTechnology* மற்றும் *Petroleum Engineering* துறைகளை இந்த அரசாங்கம் ஊக்குவித்திருந்தால், இந்தத் துறை சார்ந்த நிறைய கண்டுபிடிப்புகள் நிகழ்ந்திருக்கும். நாட்டின் பொருளாதாரம் உயர்ந்திருக்கும், மக்களின் வாழ்க்கைநிலை மேம்பட்டிருக்கும்.

ஆனால் இதைச் செய்யாமல் பொறியியல் என்ற பெயரில் ஒரு சில குறிப்பிட்ட பாடப் பிரிவுகளை மட்டும் பெரும்பான்மை கல்லூரிகளில் வைத்திருக்கும் இந்த நிலை மாற வேண்டும்.

மக்கள் மனநிலையில் மாற்றம் வர வேண்டும். அதற்கு இந்தக் குறிப்பிட்ட சில பாடப் பிரிவுகளின் பெயரால் கட்டப்பட்டிருக்கும் மாயை உடைதெறியப்பட வேண்டும்.

பொதுவாகவே *Engineering* க்கான முக்கியத்துவம் குறைந்து மற்ற கலை மற்றும் அறிவியல் சார்ந்த படிப்புகளும் முக்கியத்துவம் அடையும் பொழுது தான், எல்லாத் துறைகளிலும் பரவலாகப் படித்து மாணவர்கள் சிறந்து விளங்கும் பொழுது தான், ஆரோக்கியமான கல்வி மற்றும் பொருளாதாரச் சூழலை நாம் அடைய முடியும்.

நாம் ஒவ்வொருவரும் பொறுப்புணர்ந்து இந்தக் கல்விமுறையை தூக்கி எறியாவிட்டால், கல்வி முறையில் மாற்றம் கொண்டுவராவிட்டால், விரைவிலே நாம் அனைவரும் கார்ப்ரேட் அடிமைகளாக மாற்றப்பட்டு சொந்த நாட்டிலே அடிமையாக்கப்படுவோம்.

தமிழ்நாட்டில் தொழில்முனைவோர் வெகுவாகக் குறைந்து பொருளாதாராத்தில் பெரிய பின்னடைவை தமிழ்ச் சமூகம் விரைவில் சந்திக்க நேரிடும். சிந்தித்து விழித்தெழுவோம்.

**சிந்திக்க...**

இராமனைச் செருப்பால் அடிப்பதற்கு அலரும் பக்தர்களே, நீங்கள் தினமும் பூமா தேவியை செருப்பால் மிதிக்கலாமா?

## வரலாறு

சிவகங்கை, தேவகோட்டை, இராமநாதபுரம் போன்ற நாட்டார்கள் ஆதிக்கம் உள்ள பகுதிகளில் தாழ்த்தப் பட்ட மக்கள் மேலாடை அணியக்கூடாது. பெண்கள் இரவிக்கை அணியக்கூடாது. வெள்ளைச் சேலைதான் கட்டவேண்டும். வண்ணச் சேலைகளைக் கட்டக் கூடாது. தங்க நகைகள் அணியக்கூடாது. வெள்ளி, செம்புப் பாத்திரங்கள் வைத்துக்கொள்ளக்கூடாது. செருப்பு அணிந்து நடக்கக்கூடாது. மழைக்கோ, வெயிலுக்கோ குடைபிடிக்கக்கூடாது என்பவை போன்ற பல ஜாதிக்கட்டுப்பாடுகள் இருந்தன. அந்தக் கட்டுப்பாடுகளை சிவகங்கை மாவட்டம் எழுவன் கோட்டையில் வசித்துவந்த தாழ்த்தப்பட்ட மக்கள் மீறிவிட்டனர். மேலாடைகளை அணிந்துவிட்டனர். அதைப் பொறுத்துக்கொள்ள முடியாத நாட்டார்கள்-கள்ளர்கள் எழுவன்கோட்டைக்குள் நுழைந்து கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தி தானியங்களையும்,நகைகளையும்,பாத்திரங்களையும் கொள்ளையடித்துச்சென்றனர். வீடுகளுக்குத் தீ வைத்தனர். 05.07.1932 இல் இந்தத் தாக்குதல் நடந்தது. உடனே சுயமரியாதை இயக்கம் தலையிட்டு நாட்டார்களை எதிர்த்துப் போராடியது. இதுபோன்ற தீண்டாமை வன்கொடுமைகளை குடிஅரசு வெளி உலகுக்குக் கொண்டு சென்றது.

கும்பகோணம் அருகிலுள்ள குடவாசலுக்கு அருகே எல்லையூரில் 25.08.1932 இல், அங்குள்ள தாலுகா போர்டு பள்ளிக்கூடத்தில் படிக்கவேண்டும் என்பதற்காக மாணவர்களைச் சேர்ப்பதற்காக தாழ்த்தப்பட்ட மாணவர்கள் 4 பேர் சென்றுள்ளனர். அப்பள்ளியின் தலைமைஆசிரியர் ஒரு பார்ப்பனர். தாழ்த்தப் பட்டவர்களுக்கு படிப்பு தேவையா என்றுசொல்லி அவர்களை அடித்து விரட்டியுள்ளார். குடிஅரசும் சுயமரியாதை இயக்கமும் இக்கொடுமைக்கு எதிராகப் போராடியது. 04.09.1932

மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் கருங்காலக்குடியில் பெரியநாயகி அம்மாள் என்பவர் பார்ப்பனர்களுக்கு என தனியாக ஒரு அன்னச்சத்திரத்தைக் கட்டிவைத்தார். அதன் பொறுப்பாளராக ஒரு பார்ப்பனரையும் நியமித்தார். அந்த அன்னசத்திரத்தின் வழியே சென்ற ஒரு பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் அந்த சத்திரத்துக்குச் சொந்தமான கிணற்றில் தண்ணீர் இறைத்துக் குடித்துவிட்டார் என்பதற்காக நிர்வாகியான பார்ப்பான் அவரைச் செருப்பால் அடித்து விரட்டியிருக்கிறார். பிற்படுத்தப்பட்டவருக்காகவும் களத்தில் இறங்கியது குடி அரசுதான். 26.08.1928

ஸ்ரீவில்லிப்புத்தூர் அருகே மதுரைச்சாலையில் உள்ள அம்மாபட்டியில் நாயுடுகளுக்குச் சொந்தமான கிணற்றில் நாடார்கள் தண்ணீர் இறைக்கக்கூடாது என்று தடை இருந்தது. அதை நீக்கி நாடார்களுக்கு தண்ணீர் உரிமையைப் பெற்றுத் தந்தது சுயமரியாதை இயக்கம். குடி அரசு 10.03.1929

# குழந்தைகளுக்கு மது திணித்தது குற்றம்தான். மதத் திணிப்பு? ஜாதித் திணிப்பு?

திருவண்ணாமலை அருகே மேல்சோழன் குப்பம் என்ற பகுதியில் ஒரு சிறுவனுக்கு அவனது தாய்மாமன் மது ஊற்றிக்கொடுத்துள்ளார். தாய்மாமனும் அவரது நண்பர்களும் சிறுவன் மது குடிக்கும் காட்சியை செல்பேசியில் படம் எடுத்து நெருங்கிய வட்டத்துக்குள் பரப்பியும் உள்ளனர். கடந்த சில நாட்களாக அனைத்துத் தொலைக்காட்சிகளும் இச்செயலைக் கண்டித்துப் பரபரப்பான விவாதங்களை நடத்தி வருகின்றனர்.

இதுபோன்ற செயல்களை நாம் நிச்சயமாகக் கண்டிக்க வேணடும்.விருப்பமில்லாமல், அதுவும் தனக்கு திணிக்கப்படும் ஒரு பொருளைப்பற்றிய எந்த அறிவும் இல்லாமல் இருக்கும் ஒரு குழந்தைக்கு மதுவை ஊற்றிக் கொடுப்பது - குடியைத் திணிப்பது மிகப்பெரும் தவறான செயல். இதற்காக அந்தக் குழந்தையின் தாய்மாமனும் அவருடன் இணைந்து இச்செயலை அரங்கேற்றிய உறவினர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேசமயம் குழந்தைகள்மீது ஒரு 3 அல்லது 5 மணி நேரம் மட்டுமே நீடித்திருக்கும் சக்தியுள்ள மதுவைத் திணிப்பதையே மிகப்பெரும் கொடுமையாக ஊடகங்கள் சித்தரிக்கின்றன. பொது மக்களும் கடும் கோபத்தை வெளிப்படுத்துகின்றனர். ஆனால் மதுவைவிடக் கொடுமையான மத போதையை ஏற்றுக்கொண்டு, வாழ்நாள் முழுதும் போதையோடு திரிந்து - தனது சுய அடையாளம் என்றால் என்ன என்பதையே புரியாமல் - அந்த போதையாலேயே அழிகிறான் மனிதன். ஒருவர் இருவரல்ல, கோடிக்கணக்கான மக்கள். அதற்காக இந்த ஊடகங்கள் என்றாவது நேரம் ஒதுக்கியதுண்டா?

குழந்தைக்கு மதுவைத் திணிப்பதா? என அலறும் கோடிக்கணக்கான தமிழ்ச்சமூகம், அதே குழந்தைக்கு அது கருவில் உருவாகும்போதே அக்குழந்தையின் மீது ஜாதியைத் திணிக்கிறது. உலகிலேயே பிறப்பதற்கு முன்பே கருவிலேயே திணிக்கப்படும் போதை இந்த ஜாதி போதைதான். கருவாகி, பத்து மாதம் கழித்து குழந்தையாகப் பிறந்த உடனேயே அது தவழும் இடம் சேரியாகவும், ஊராகவும், பார்ப்பன அக்ரஹாரமாகவும் ஜாதிக்கு ஏற்றபடி வாழும் இடம் அதன்மீது திணிக்கப்படுகிறது.

பிறந்து ஓரிரு நாட்களில் பெயர் சூட்டும் போதே மதம் திணிக்கப்படுகிறது. ஓரிரு மாதங்களில் பிறக்கும்போது தலையில் இருந்த முடியை நீக்கிக்கொள்ளும்போது இந்து மதம் என்ற இழிவும்,இந்துமதச்சடங்கும் திணிக்கப் படுகிறது. இன்று மதுவைத் திணித்த தாய்மாமன் குற்றவாளியாக நிற்கிறான். அதே தாய்மாமன் மடியில் வைத்து இன்னும் சில மாதங்களில் அல்லது சில ஆண்டுகளில் மது திணிக்கப்பட்ட அதே சிறுவனுக்கு காதுகுத்துவிழா நடத்துவார்கள்.

அதாவது மது திணிக்கப்பட்ட சிறுவனுக்கு மதச்சடங்கைத் திணிப்பார்கள். எந்தக் குழந்தையையும் கேட்டுவிட்டு, அதன் அனுமதி பெற்றுவிட்டுத்தான் இந்த ஜாதியையும், மதத்தையும் அவர்கள் மீது திணிக்கிறார்களா? வாழ்க்கையின் போக்கையே மாற்றிவிடும் இதுபோன்ற ஜாதி, மதங்களைத் திணிப்பது மதுவைத் திணிப்பதைவிட மிக மிகக் கொடூரமான திணிப்பு அல்லவா?

அதே சிறுவன் சிறுமியாக - பெண்ணாகப் பிறந்திருந்தால் அடுத்த 10 ஆண்டுகளில் பூப்புனித நீராட்டுவிழா என்ற அறிவுக்குப் பொருந்தாத இந்துமதச்சடங்கைத் திணிப்பார்கள். அதற்கடுத்த சில ஆண்டுகளில் இந்தத் தாய்மாமனையே மணமகனாக - வாழ்க்கைத் துணையாக அவளுக்குத் திணிப்பார்கள். அவளது விருப்பங்கள்,கனவுகள்,இலட்சியங்கள் அழிக்கப்பட்டு விடும்.

ஆண் - பெண் - திருநங்கையர் - திருநம்பியர் யாராக இருந்தாலும் அவர்கள்அவர்கள் என்ன சாப்பிட வேண்டும், என்ன உடை உடுத்த வேண்டும், எப்படி வாழவேண்டும் என அனைத்தையும் திணிப்பது மதங்களே ஆகும். ஒழுக்கம், கற்பு, பண்பாடு, பழக்கவழக்கம் என்ற பெயர்களில் பல ஆயிரம் ஆண்டுகளாக நம்மீது சமூகத்தின் ஆதிக்கசக்திகளாக உள்ள பார்ப்பனர்களின் விருப்பங்கள் - ஆரியர்களின் பண்பாடுகள் - இந்துப்பார்ப்பனப் பண்பாடுகள்தான் திணிக்கப்பட்டு வருகின்றன.

இப்படி பல கொடுமையான திணிப்புகளைச் செய்துவரும் - அனுமதித்துவரும் சமுதாயம் மதுவைத் திணிப்பதை மட்டும் குற்றம் என்று சொல்வது நேர்மையற்ற செயல் அல்லவா? அனைத்துத் திணிப்புகளையும் எதிர்ப்போம்.

– ராயல் சேலஞ்ச்



*அவனன்றி ஓரணுவும் அசையாதுஎனில்,*
*கோவில் சிலை வெளிநாடு செல்வது எவன் செயல்?*

சுயமரியாதை வாழ்வே சுக வாழ்வு பகுதி 10

# வாங்க பழகலாம்

அரசூர். அ.ப.சிவா

தமிழ்த் திரைப்படத் துறையைச் சேர்ந்த நண்பர் ஒருவர் சொன்ன செய்தி. வெளிநாட்டு இயக்குநர் ஒருவர் நம்மூர் படங்கள் சிலவற்றைப் பார்த்துவிட்டுச் சொன்னாராம் உங்க ஊருல ஆனும் பெண்ணும் சேர்வதைத்தவிர. வேறு பிரச்சனைகளே இல்லையா?? அட ஆமா எத்தனை பிரச்சனை இருக்கு உங்களுக்கு விரிவான பார்வையே இல்லை, என்று நண்பரிடம் சொன்னேன்.

இப்ப அது தப்பா போச்சே. அட ஆமாங்க எங்க நாட்டுல ஆனும் பெண்ணும் சேர்வதே பெரிய பிரச்சனை தான், என்று அந்த வெளிநாட்டு இயக்குநரை பார்த்து சொல்லவேண்டும் போல இருந்தது..

இளவரசனுக்குப் பின் இப்ப கோகுல்ராஜ் என தொடர்கதை ஆகிவிட்டது. தண்டவாளக் கொலைகள். காதல் கைகூடாத காதலர்களை ரயில் தண்டவாளங்களோடு ஒப்பிடுவார்கள் கவிஞர்கள் அக்கற்பனை இப்போது நிஜமாகிக் கொண்டுள்ளது.

வட, தென் மாட்டங்களைப் போல் இல்லை மேற்கு மாவட்டங்கள்... என அடிக்கடி பெருமை பீற்றிக்கொள்ளும் கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த ஆதிக்க ஜாதிக்காரர்கள் மனித நேயத்துக்குக் கெதிரான செயல்களை மெதுவாய் அரங்கேற்றி வருகிறார்கள்.

இச்செய்திகளைக் கவலையாய்ப் பார்த்து கொண்டிருக்கும் போதே நண்பன் கொங்கு குல சிங்கம் வந்துவிட்டான்.. ஓ இனி உங்களுக் கெல்லாம் அரசியல் செய்வதற்கு வழியாச்சு என்றபடியே .

உனக்கே தெரியும் நம்மூருல நாங்களும் குப்பனும், சுப்பனும் அண்னண் தம்பியா பழகறோம் யாரோ சிலர் செய்யுற பிரச்சனை எங்களுக்கு கெட்ட பெயர்.

தம்பி கொங்கு குல சிங்கம்... இங்க நீங்களும் அவங்களும் அண்னண் தம்பியா பழகறதுதான், பிரச்சனை கொஞ்சம் மாத்தி பழகோனும் அது எப்படின்னு கடைசியுல சொல்றேன் . ஆமா இதை வச்சு அரசியல் செய்ய நாங்கென்ன மார்க்கெட்டு போன ஈமு கோழியா?? இரண்டு பேர் காதலிச்சா உங்களுக்கென்ன பிரச்சனை என்றேன்.

அமா, நாங்க 18,20 வருசம் பொத்தி, பொத்திப் பொண்ணை வளர்த்தி காலேஜிக்கு அனுப்பினா, இந்த பலவட்ட சாதிப் பசங்க பணக்காரப் பொண்ணுகளா பாத்துக் குறி வச்சுக் காதலிக்கறாங்க எங்க அய்யன் ஆத்தா வாயைக் கட்டி வயித்தக் கட்டி வளத்த பொண்ணுகளை இப்படிக் காதலிச்சுக் கல்யாணம் செஞ்சா நாங்கெப்படி ஊருக்குள்ள நடமாடறது என்றான் கொ.கு.சி

முதல்ல உங்க பெண்ணுகளை அசிங்கப் படுத்துவதை நீங்க நிறுத்துங்க. அட முட்டாப் பசங்கா!! 18,20 வருசத்து பெண்கள் தேர்ந் தெடுக்கும் துணை தப்பென்றால் அல்லது தவறான நோக்கில் அணுகும் ஆணிடம் காதல் வயப்படும் அளவிற்கா உங்க சமூகத்துப் பெண்கள் இருக்காங்க??? அவர்கள் மேல் தப்பில்லை உங்க பார்வையில் தான் தப்பு.

போன வாரம் பல்லடத்தில் பத்திர எழுத்தர் ஒருவரிடம், உங்க கொங்கு குல தகப்பன் ஒருத்தரு வந்து ஓடுகாலிக் கழுத பேருக்கு எந்த சொத்தும் போகக் கூடாது உடனே பத்திரம் தயார் பண்னச் சொன்னாரு.. உங்க பிரச்சனை சொத்து தானே?

ஆமா. பெத்த தாய் தகப்பன் வேண்டமுன்னு போனவளுக்கெதுக்கு சொத்து இது கொ.கு.சி. அது சரி தம்பி அது உங்க விருப்பம். நான் சொல்றது உங்க இலக்கு என்ன என்பதே. பெத்த தாய் தகப்பன் ஜாதி சனம் தான் முக்கியம் என்றால், உங்க திருமணத் தகவல் மையத்துல போய் ஜாதகங்களைப் பாரு. 4 ஏக்கரு 8 கோடி 2000 ச.அடி வீடு அப்படின்னு மொத்த சொத்தையும் பதிவு செங்சிருக்காங்க, ஆனா இலவச டீவி வாங்க லைன் கட்டி நிக்கறீங்க. அத்தனை ஜாதகத்தையும் சேர்த்து வருமான வரித்துறைக்கு அனுப்புனா, பல தலை உருளும்.

ஜாதி விட்டு காதலிச்சா, அட சொத்து சுகமா முக்கியம் நம்ம ஜாதிப் பையனா இருந்தா போதும் அப்படிங்கறதும், ஒரு ஜாதிக்குள்ள காதலிச்சா அட வெறும் பயல் அவனைப் போய் நம்ம அந்தஸ்து என்ன??? அப்படிங்கறதும்??? என்ன நாடகம்?



அன்பே உருவான கடவுளுக்கு கொலைக்கருவிகள் எதற்கு?

அதெல்லாம் இருக்கட்டும். தாழ்த்தப்பட்டவனெல்லாம் அளுக்கொரு கட்சி ஆரம்பித்து இருக்கையில் நாங்க 4 பேர் கட்சி ஆரம்பித்தால் மட்டும் உங்களுக்கு ஜாதிக்கட்சியா?? கருப்பு சட்டைக்காரனுகளுக்கு எப்பவுமே இந்து மத்ததை திட்டுவது அல்லது மேல் ஜாதிக் காரனை திட்டறது, என்றான் கொ.கு.சி .

உங்க பாட்டன் பூட்டனால்தானே தாழ்த்தப்பட்டார்கள். குப்பனையும், சுப்பனையும் தாழ்த்தாமல் இருந்திருந்திப்பார்களே என்றால் இங்கு அதற்கு அவசியமே இருந்திருக்காது. பசி ஏப்பத்துக்கும், புளி ஏப்பத்துக்கும் வித்தியாசம் தெரியலை உனக்கு என்றேன்.

தாழ்த்தபட்ட சமுகத்தைச் சேர்ந்த தலைவர்களெல்லாம் தன் சமூகத்திற்காகப் போராடி இழப்பு களைச் சந்தித்து சிறை சென்று, தலைவர்கள் ஆனவர்கள். ஆனாப் பாரு உங்க தலைவருகளெல்லாம் பல கோடிகளைச் சம்பாரித்து விட்டு, அதைக் காப்பாத்த, ஜாதிப் பேரைச் சொல்லி தலைவர்கள் ஆனவர்கள். உங்க தாத்தா கை நாட்டு, உங்க அப்பா பள்ளிக்கூடம் போனாரு, இப்ப நீ கல்லூரி போறாய் இந்த முன்னேற்றத்தில் உங்க சமூகத்தலைவர்களின் பங்கு என்ன????

18 வயசு நிரம்பிய ஆணுக்கும் பெண்ணுக்கும் தன் துணையைத் தேர்ந்தெடுக்கும் விசயத்தில் யார் அனுமதியும் பெற வேண்டியது இல்லை. அது அவர்களின் முழு உரிமை முடிந்தால் உங்கள் குழந்தைகளை அங்கீகரியுங்கள். இல்லையென்றால் நான் வாயக்கட்டினேன் வயித்தை கட்டினேன் என டயலாக் விடாமல் வேலையை பாருங்கள்.

சரி அதெல்லாம் நாங்க பார்த்துக் கோறோம். நாங்க இரண்டு சமூகமும் அண்னண் தம்பியா பழகறதுதான், பிரச்சனை அப்படின்னு சொன்னியே வேற எப்படி பழகறது . என்றான் கொ.கு.சி

உனக்கு மட்டுமல்ல தம்பி மத்த எல்லா கொங்கு குல சிங்கங்களுக்கும் தான் சொல்றோம். நீங்க அண்னண் தம்பியா பழகணுதெல்லாம் போதும். கொஞ்ச நாளைக்கு மாமன், மச்சானா பழகுங்க.

**சிந்திக்க...**

தசரதனுக்கு அறுபதாயிரம் மனைவிகள்
என்பது அறிவுடையோர் ஏற்கும் செய்தியா?
தேவர்களாலும், முனிவர்களாலும்
கணிக்கப்பட்ட இராமன், சீதை முகூர்த்தம்
வன வாசத்தில் கொண்டுபோயா விடவேண்டும்?

## நெசமாத்தான் சொல்றோம்

- குண்டூசி

காடு, கழனியில்..
தண்ணி கட்டியபின்..
தவுடு புண்ணாக்கோட
மாட்டுக்கு தண்ணி காட்டியபின்
பொடக்காளியில்
ஈய டம்ளருல
காபித் தண்ணி
குடிக்கிற அம்மாசை கூடவும்

வாரம் தவறாம
வூட்டுக்கு வந்து
முடி வெட்டுற குப்பன் கூடவும்
அய்யன் இழவுக்கு
கொட்டு போட்ட
சுப்பன் கூடவும்..

நெசமாத்தன் சொல்றோம்..
நாங்க..
அண்ணன் தம்பியத்தான்
பழகுறோமுங்க .

செம்புலப் பெயல்
நீர் போல் அன்புடை
நெஞ்சுகள் கலக்கவே
முடிவதில்லை- தண்டவாளங்கள்

இன்று
சேரநன் நாட்டிளம்
பெண்களுடன்
சுந்தர தெலுங்கில்
பாட்டிசைப்பவன்
கிடக்கிறான் - தண்டவாளத்தில் .

ரயில் தண்டவாளத்தில்
தெரிந்தது- இவர்கள்
வண்டவாளங்கள் .

வாயக்கட்டி .
வயத்தக்கட்டி
வளத்தவர்கள்- அவளின்
கண்ணை கட்டினர் .

# ஓமணப் பெண்ணே...!

## நாமக்கல் நாகரீகம்

### கேரளத்தில் மணப்பெண் தேடும் நாமக்கல் இளைஞர்கள்



மருத்துவர் இராமதாசு, காடுவெட்டி குரு, கோவை ஈஸ்வரன், பெஸ்ட் இராமசாமி, தனியரசு, பொங்கலூர் மணிகண்டன், நாமக்கல் யுவராஜ் என பல ஜாதித்தலைவர்கள் பலரது பேச்சும், நடவடிக்கைகளும் தமிழ்நாட்டில் நடைபெறும் ஆணவக்கொலைகளுக்கு அடிப்படையாக உள்ளன. நியாயமாகவும், சட்டப்படியும் இளவரசன், கோகுல்ராஜ் படுகொலை போன்ற அனைத்து ஆணவக் கொலைகளுக்கும் மேற் கண்ட அனைவரது மேலும் வன்கொடுமை தடுப்புச் சட்டப்பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யவேண்டும்.

இவர்கள் என்னதான் ஆணவக்கொலை களை நடத்திக் கொண்டிருந்தாலும் அதைவிட வேகமாய் ஜாதி மறுப்புத் திருமணங்களும் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. திராவிடர் இயக்கங்கள் இவற்றை ஒரு முக்கியக் கடமையாக எண்ணிக் களமிறங்கியுள்ளன. ஏராளமான ஜாதி மறுப்புக் காதல் இணையர்கள் திராவிடர் இயக்கங்களின் பொறுப்பாளர்களைச் சந்தித்து, திருமணங்களை நடத்திக் கொள்கின்றனர்.

திராவிடர்கழகம் ‘மன்றல்’ என்ற பெயரில் ஜாதி, மத மறுப்புத் திருமணங்களை தமிழ்நாட்டின் முக்கிய நகரங்கள் அனைத்திலும் ஒரு பெரும்விழாவாகவே நடத்திவருகிறது. திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவர்களின் மேட்டூர் பெரியார் படிப்பகம், காவலாண்டியூர் பெரியார் படிப்பகம் ஆகியவற்றிலும் - தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் தோழர் கோவை இராமக்கிருட்டிணன் அவர்களின் கோவை பெரியார் படிப்பகத்திலும்

அண்மைக்காலமாக தினந்தோறும் ஏதோ ஒரு ஜாதி, மதம் கடந்த காதல் இணையர்கள் வருகிறார்கள். தினந்தோறும் திருமணங்கள் நடைபெறுகின்றன.

ஆனால் அவற்றைவிட முக்கியமான செய்தி ஒன்று 2010 லேயே ஜூனியர் விகடன் இதழில் வெளியாகி உள்ளது. நாமக்கல் பகுதி கவுண்டர்கள் கேரளாவில் உள்ள ஒடுக்கப்பட்ட சமுதாயமான ஈழவப் பெண்களைத் திருமணம் செய்து நிம்மதியாக வாழ்ந்து வருவது தொடர்பான விரிவான செய்திகள் வெளியாகி உள்ளது. அவற்றை அப்படியே தருகிறோம்.

நாமக்கல் மாவட்டத்தில் தகதகவென மின்னும் ஃப்ளெக்ஸ் பேனர்கள் அழைக்கின்றன... ’கேரள மணமகள் வேண்டுமா?’ திரும்பும் திசை எல்லாம் ’இவ்விட வல்லிய குட்டி உண்டு’ என வரவேற்கிறார்கள்.

”இது என்ன பெரிய அதிசயம்? பல வருஷமாவே இது நடக்குதே!” என்கிறார்கள். ஹலோ, கற்பனையை ஓட்ட வேண்டாம். கேரளப் பெண்களை மணம் முடிப்பது இந்தப் பக்கம் ரொம்ப ஈஸி!

லத்துவாடி கிராமத்து விவசாயி நல்லதம்பியைப் பார்த்தோம். “ஆமாங்க... எனக்கு 48 வயசுங்க. ஊரு ஊராப் பொண்ணு தேடி வயசானதுதான் மிச்சம். அப்புறம்தான் ஒரு புரோக்கர் மூலமா, கேரளா போனேன். பார்த்தேன்... பிடிச்சுப்போச்சு. டக்குனு கல்யாணம் முடிச்சுக்கிட்டு வந்துட்டேன். இந்தப் பகுதியில நிறைய பேரு இப்படித்தான் கல்யாணம் பண்றாங்க. இப்ப எனக்குக் கல்யாணம் முடிஞ்சு நாலு வருஷமாச்சு...” என்றவர், “சுனிதா... ஒரு கோஃபி கொண்டு வரூ...” என்று குரல் கொடுக்க... புரூ காபிக் கோப்பையுடன் ஒரு பெண் நின்றார்... நல்லதம்பியின் மனைவி சுனிதா.

மலையாள வாடை கலந்த தமிழில் பேசினார் சுனிதா. “ஞான் டென்த் கிளாஸ் வரை படிச்சிருக்கு. எங்க அச்சன் கேரளத்தில் ஒரு ’லோரி டிரைவர்’. எங்கூட பொறந்தது மூன்று பொண் குட்டிங்க. வீட்ல வசதி ரொம்பக்



அணுவில் இருக்கும் ஆண்டவன் அணுகுண்டில் இல்லையா?

குறைச்சல். கேரளாவில் வரதட்சணை அதிகம். சரியான வரன் அமையலா. அப்புறம்தான் ஒரு புரோக்கர் மூலமா இவரு பெண் பார்க்க வந்தாரு. கல்யாணம் முடிஞ்சு, நல்லாப் பார்த்துக்கிறார். ஓணம், விஷுங் சமயங்களில் எங்குள் ஊருக்கு ஜோடியாப் போய் வர்றோம். எங்க குடும்பத்தைச் சேர்ந்தவங்களும் இங்க வந்து போறாங்க. லத்துவாடி கிராமக் கோயில் திருவிழா இப்ப நடக்கு. எங்க அச்சனும் அம்மாவும் வந்திருக் காங்க. அவங்களுக்கு இந்த ஊர் திருவிழா ரொம்ப பிடிச்சுப்போயி...'' எனத், தன் பெற்றோரையும் அழைத்து அறிமுகப் படுத்தினார்.

சுனிதாவின் அப்பா சுவாரஸ்யமாக நம்மிடம், ''எம் பேரு சுகுமாரன். இது என் மனைவி வல்சா. வந்து நாலுநாளாச்சு. தமிழ் நாட்டுக்கு எம் பொண்ணைக் கொடுத்தது சந்தோஷமா இருக்கு. நான் ஈழவர் சமுதாயத்தைச் சேர்ந்தவன். என்னோட மாப்பிள்ளை கவுண்டர் சாதிக்காரர். ஆனாலும் பழக்கத்தில் எங்களுக்குள் இப்போ எந்தப் பாகுபாடும் இல்லை. நல்லமுறையில் எம் பொண்ணு வாழ்க்கை போயிட்டிருக்கு... அதானே முக்கியம். என்னோட சின்னப் பொண்ணுக்கும்கூட இவங்க உறவில்தான் மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணம் முடிச்சிருக்கோம்...'' என்று கவுண்டர் வீட்டு சம்பந்தியாக உருகி உருகிச் சொல்லி முடிக்க... நமக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை.

அடுத்ததாக, மாணிக்கம்பாளையம் பகுதி விவசாயியான ஆனந்தன், அவரது கேரள மனைவி சுஜா தம்பதியைச் சந்தித்தோம். ''திருமணம் முடிஞ்சு ஏழு மாசம்தான் ஆச்சு. 35 வயசாகியும் இங்கே பெண் கிடைக்கல. அப்புறம்தான் திருச்சூர் போய், சுஜாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். எங்க பரம்பரையில் இதுதான் முதல் கலப்புத் திருமணம். வாழ்க்கை ரொம்ப ஜாலியா இருக்குங்க'' என்றார் ஆனந்தன். ஓரக் கண்ணில் கணவரைப் பெருமையாகப் பார்த்துக்கொண்டு இருந்தார் சுஜா.

அடுத்து, திருமணம் முடிந்து எட்டு வருடங்களான ஒரு முன்னோடித் தம்பதியும் அருகில் இருப்பதைக் கேள்விப்பட்டு, வடகால்புதூர் சென்றோம். கணவர் செங்கோடன், டவுனுக்குப் போயிருக்க... கறவை மாடுகளுக்குத் தீனி போட்டுக்கொண்டு இருந்தார் கீதா. ''என்னோட ஊரு மலப்புரம். இந்த நாமக்கல் பகுதிக்கு மருமகளா வந்த முதல் கேரளப் பெண் நானாத்தான் இருக்கும். இங்க வந்து விவசாய வேலைகள் எல்லாம் நல்லாக் கத்துக்கிட்டேன். அடிக்கடி எங்க நாட்டுக்கும் போயி வர்றேன்.

**நான் ஈழவர் சமுதாயத்தைச் சேர்ந்தவன். என்னோட மாப்பிள்ளை கவுண்டர் சாதிக்காரர். ஆனாலும் பழக்கத்தில் எங்களுக்குள் இப்போ எந்தப் பாகுபாடும் இல்லை. நல்லமுறையில் எம் பொண்ணு வாழ்க்கை போயிட்டிருக்கு...**

எங்க வீட்டுக்காரரு கவுண்டர் சாதி. நான் ஈழவர். அதனால, எல்லாம் ஏதோரு கொழப்பமும் இல்ல...'' என்று ஜம் தமிழில் சிரித்தார் கீதா.

கேரள மணமகள்களை ஏற்பாடு செய்துவரும் கல்யாண புரோக்கர்களில் ஒருவர் முருகரவி. ''இந்தப் பகுதியைச் சேர்ந்த பல ஜோடிகள் கொளுத்தும் நாமக்கல் வெயிலுக்குத் தப்பிக்க குளுகுளு மாமனார் வீடான கேரளாவில் போய் அடைக்கலமாயிட்டாங்க...'' என்ற சம்மர் ஸ்பெஷல் தகவலுடன் பேச்சைத் தொடங்கினார். ''நான் 10 வருஷமா கல்யாணத் தரகர் வேலை பண்றேன். முதலில் உள்ளூர் பொண்ணு, மாப்பிள்ளைன்னுதான் எல்லார் மாதிரியும் அலைஞ்சுட்டு இருந்தேன். நாமக்கல் மாவட்டத்தில் விவசாயம் செய்கிற கவுண்டர் சமூகத்து இளைஞர்களுக்கு இங்கே பெண் பொருத்தமான அந்தஸ்தில் கிடைக்கலைங்க. அதில், பொண்ணு பாத்துப் பாத்தே சலிச்சுப்போய், கல்யாண ஐடியாவைக் கைவிட்டவங்களும் உண்டு.

ஒரு கட்டத்தில், 'எந்த சாதி, மதம் ஊரு, நாடுன்னாலும் பரவாயில்லை. பொண்ணு கிடைச்சாப் போதும்'னு சொல்ல ஆரம்பிச்சுட்டாங்க. நானும் அந்த சமயத்துல 'கேரளாவில் நிறையப் பெண்கள் வரதட்சணை காரணங்களினால் திருமணம் நடக்காமத் தவிக்கிறாங்க'ன்னு கேள்விப்பட்டேன். அங்கு புரோக்கர் மூலமா, இங்கே உள்ள இளைஞர்களுக்குப் பெண் தேடத் தொடங்கினேன். அது கேரளப் பெண்களுக்கும் உபகாரமா இருந்ததால, மளமளன்னு நிறைய ஜோடிகளுக்கு திருமணம் நடக்க ஆரம்பிச்சது.

இதுவரை நான் இப்படி 60 கல்யாணம் செய்து வெச்சிருக்கேன் (அடேங்கப்பா!). எல்லாரும் ஜாம்ஜாம்னு இருக்காங்க. இன்னொரு விஷயம், தமிழ்நாட்டு ஆண்களைக் கல்யாணம் செய்துக்க கேரளப் பெண்கள் ரொம்ப ஆர்வமா இருக்காங்க. இப்பகூட 40 பெண்கள் ரெடியா இருக்காங்க... சீக்கிரமே ஜோடி சேர்த்துக் கெட்டிமேளம் கொட்டவெச்சிடுவேன், பாருங்க...'' என்று பூரிப்பாகச் சொன்னவரிடம்,

''கேரளா போனா, உடனே கல்யாணத் துக்கு பொண்ணு கிடைச்சிடுமா?'' என்று கேட்டோம்.



ஆண்டவன் உண்பதாக உணவு படைக்கின்றாயே! அது மலங்கழிக்காதா?

**இது காலத்தின் கட்டாயம். வம்சம் விருத்தியடையவும், குழந்தைகள் ஆரோக்கியமாகப் பிறக்கவும், இதுபோல் சாதி மாறி மட்டுமின்றி, மாநிலம் மாறியும் கல்யாணம் பண்ணிக் கொள்வது ரொம்பவே துணை நிற்கும்!''**

"அதான் இல்லை. கேரள மக்கள் ரொம்ப விவரம். மாப்பிள்ளைக்கு வயசு கொஞ்சம் கூடக் குறைய இருந்தாலும் கவலைப்பட மாட்டாங்க. ஆனா, மனைவியை அக்கறையா கவனிச்சுப்பாரா, அசையாச் சொத்து இருக்குதானு பார்க்குறாங்க..." என்றவர், தொடர்ந்து அந்தத் திருமண நடவடிக்கைகளைப்பற்றி விரிவாகச் சொன்னார் -

"பெண் கேட்டு என்னிடம் வரும் நாமக்கல் மாப்பிள்ளைகளைக் கேரளா அழைச்சுட்டுப் போய், தகுந்த பெண்களைக் காட்டுவேன். இருவருக்கும் பிடிச்சிருந்தா, தனியா மனம் திறந்து இருவரையும் பேசவெப்போம். ரெண்டு தரப்பும் ஓகே சொன்னாப் போதும்... சாதி, ஜாதகம், படிப்பு, வயசு(?) இப்படி எதுவும் கேரளப் பெண் வீட்டார் கேட்கமாட்டார்கள்.

ஆனால், நிச்சயத்தாம்பூலம் மாற்றுவதற்குள், மணமகனின் 'மெடிக்கல் சர்டிஃபிகேட்'டைக் கண்டிப்பாக் கேட்பாங்க. குறிப்பா, ஹெச்.ஐ.வி. நெகட்டிவ் ரிசல்ட் கொடுத்தாகணும். அவங்க கேட்கிற அறிவியல்பூர்வமான ஜாதகம் அது ஒண்ணுதான். அதேபோல் பொருளாதார ஜாதகம் ஸ்ட்ராங்கா இருக்கான்னு சொத்து விவரங்களை உறுதிபடுத்திக்குவாங்க. கல்யாணம் கண்டிப்பா கேரளாவில்தான் நடக்கணும்கிறது அவங்களோட கண்டிஷன். திருமணத்தைப் பதிவு செஞ்சு, திருமணப் பதிவு நகலை காவல் துறை, வருவாய்த் துறை, மகளிர் மேம்பாட்டுத் துறைக்கெல்லாம் பக்காவாக அனுப்பி, பதிவு செஞ்சுட்டுத்தான் புகுந்த வீட்டுக்குப் பெண்ணை அனுப்பி வைப்பாங்க. அவங்களுக்கு நல்ல வாழ்க்கை அமையுது. நமக்கு நல்லாப் பொழைப்பு ஓடுது!" என்று மகிழ்ந்து சிரிக்கிறார் முருகரவி,

"எப்படியோ... சாதி விஷயத்தில் விட்டுத்தராத கவுண்டர் சமூகத்தில் இருந்து, இப்படி பிராக்டிகலாகச் சிந்திக்க ஆரம்பித்திருப்பது நல்ல விஷயம். இது காலத்தின் கட்டாயம். வம்சம் விருத்தியடையவும், குழந்தைகள் ஆரோக்கியமாகப் பிறக்கவும், இதுபோல் சாதி மாறி மட்டுமின்றி, மாநிலம் மாறியும் கல்யாணம் பண்ணிக் கொள்வது ரொம்பவே துணை நிற்கும்!" என்று அசத்தி முடித்தார்.

இந்தக் கலப்புத் திருமணங்கள் குறித்து ஆய்வு செய்து வரும் சமூக சேவகர் சந்திரன்(எ) முகிலனைப் பார்த்தோம்.

"வறட்சியான நாமக்கல் மாவட்டத்தில், வரதட்சணை அதிகம் கொடுத்துத்தான் முன்பெல்லாம் பெண்களை திருமணம் செய்து கொடுத்தாக வேண்டும். ஒரு கட்டத்தில் அதுவே பெண்ணைப் பெற்றவர்களுக்கு பெரும் சுமையாகிவிட்டது. அதன் வெளிப்பாடாக, பெண் சிசுக் கொலைகள் இங்கும் அரங்கேறின. அதோடு, வயிற்றில் உள்ள குழந்தை ஆணா, பெண்ணா என்று அறியும் ஸ்கேனிங் முறையாலும் 80-களில் பலர் பெண் சிசுக்களைக் கலைத்துவிட்டனர். அதுதான் இப்போது கல்யாண வயதில் இங்கே பெண்கள் இப்போது குறைவாக இருப்பதற்கு ஒரு காரணம்.

கவுண்டர் சமுதாயம்தான் என்றில்லை... லாரித் தொழில் அதிகம் உள்ள நாமக்கல்லில் எய்ட்ஸ் நோயாளிகள் அதிகம் என்று பரவிவிட்ட தகவலை நம்பி, இங்கு உள்ள பையன்களுக்குப் பெண் கொடுக்கத் தயங்குபவர்களும் இருக்கிறார்கள்.

பெண் குழந்தைகளை விரும்பிப் பெற்றுக்கொண்டவர்கள், அவர்களை நன்றாகப் படிக்கவைக்கும் வழக்கம் இங்கு உண்டு. இதனால் நாமக்கல் பெண்கள் பலரும் உயர் கல்வி முடித்து நல்ல வேலையிலும் இருக்கிறார்கள். லாரி, விவசாயம் என்று தொழில் செய்துவரும் பல நடுத்தர வாலிபர்களின் அந்தஸ்து இவர்களோடு சரிப்படுவதில்லை. அதுதான், சொத்துப் பத்திரமும் மெடிக்கல் சர்டிபிகேட்டுமாக இளைஞர்கள் கேரளா பக்கம் படையெடுத்துச் செல்கின்றனர்" சொல்லி முடித்தார் சந்திரன்(எ) முகிலன்!

- ஜி.பழனிச்சாமி (ஜூனியர் விகடன் - 02.06.2010








விதிப்படி எல்லாம் நடக்கும் போது வீணாக ஆண்டவன் ஏன்?

அதி அசுரன்

# பார்ப்பனப் பண்பாட்டுப் படையெடுப்பில் ஈழம்

“நாம் ஒடுக்கப்பட்டு வரும் ஓர் மக்கள் இனம். அந்நியனின் அடக்குமுறையால் நாம் அழிக்கப்பட்டு வந்தபோதும் எமக்குள்ளேயே, எமது சமூக வாழ்வில் நாம் எம்மவர்களை மோசமான முறையில் அடக்கி ஒடுக்கி வருகிறோம். இப்படியாக எம்மத்தியில் நிலவி வரும் ஓர் ஒடுக்குமுறை வடிவம்தான் பெண் ஒடுக்குமுறை. பழமை வாதத்திலும். மூடநம்பிக்கைகளிலும் எமது சமூக அமைப்பில் நீண்டகாலமாகப் பெண்ணினம் ஒடுக்கப்பட்டு வருகின்றது. எமது வேதாந்தங்களும், மத சித்தாந்தங்களும், மனு நீதி சாஸ்திரங்களும் அந்தக்காலந்தொட்டே பெண் அடிமைத்தனத்தை நியாயப்படுத்தி வந்திருக்கின்றன. ஆணாதிக்கம், சாதீயம், சீதனம் என்று பல்வேறு பரிமாணங்களில் இந்த ஒடுக்குமுறையானது பெண்களின் வாழ்க்கையை ஊடுருவி நிற்கிறது. அவர்களது வாழ்க்கையைச் சிதைத்து வருகிறது....எமது சமூகத்தின் சனத்தொகையில் பெரும்பான்மை இடத்தை வகிக்கும் பெண்கள் தொடர்ந்தும் அடிமைத்தனத்தில் வாழ்ந்து வந்தால் எமது விடுதலைப் போராட்டத்தை ஒரு தேசியப் போராட்டமாக முன்னெடுப்பது கடினம்...”

– தோழர் பிரபாகரன், விடுதலைப்புலிகள் ஏடு மாசி – பங்குனி 1991

*அந்நிய சிங்களன் தமிழர்களை ஒடுக்கிவரும் அதேவேளையில் தமிழர்களுக்குள்ளேயே நிலவி வரும் ஒடுக்குமுறைகளையும் களைய வேண்டும் என்றும், இந்துமத வேதங்களும், சாஸ்திரங்களும் தமிழர்களுக்குள்ளேயே பல்வேறு ஒடுக்குமுறைகளை விதைத்துள்ளன என்றும் விளக்குகிறார். அவற்றைக் களையாமல் தேசியஇனப் போராட்டத்தை முன்னெடுக்க முடியாது என்றும் உறுதியாகக் கூறுகிறார். தான் சொல்வதை செயல்படுத்தும் விதமாக - மனுசாஸ்திரங்களுக்கு எதிராக புலிப்படையில் பெண்கள் பிரிவை உருவாக்குகிறார்.*

*தமிழ்நாட்டில் தோழர் பெரியார் 1931 ஆகஸ்ட் மாதத்தில் விருதுநகரில் நடைபெற்ற இரண்டாவது பெண்கள் சுயமரியாதை மாநாட்டில் ஒரு முக்கியத் தீர்மானத்தை நிறைவேற்றினார். அதாவது,*

*“பெண்களை வைத்தியத் தொழிலுக்கும், ஆசிரியர் தொழிலுக்கும் மாத்திரம் தற்பொழுது எடுப்பது போதாது. அவர்களை போலீஸ் இலாக்காவிலும், இராணுவத்திலும் சேர்க்க வேண்டும்” என்றார்.*

*பெரியாரின் கனவை தமிழீழத்தில் நனவாக்கினார் பிரபாகரன். சமாதானக் காலங்களில் விடுதலைப்புலிகள் அமைப்பு உருவாக்கிய அரசியல் சட்டங்கள், நீதிமன்ற நெறிகள், காவல்துறை சட்டங்கள் ஆகியவைகளில் பெரியாரின் பல தீர்மானங்கள் செயல்வடிவம் கண்டன எனக் கேள்விப்பட்டுள்ளோம்.*

*ஆனால் அண்மைக்காலங்களில் சில இந்து அமைப்புகள் வெளிப்படையாக விடுதலைப் புலிகளையும். ஈழவிடுதலையையும் ஆதரிக் கின்றன. விடுதலைப்புலிகளின் முன்னணி அமைப்புகளும், தமிழ்நாட்டில் உள்ள ஈழவிடுதலை ஆதரவாளர்களும் இந்து மத அமைப்புகளின் அதரவை*



வரவேற்கின்றன. அவர்களோடு தோளோடு தோள் சேர்த்து நிற்கின்றனர்.

ஆயுதப்போர் முடிவுக்கு வந்துள்ள நிலையில் தற்போதைய சர்வதேச அரசியல் சூழலுக்கு ஏற்ப ஈழவிடுதலையை நோக்கிய நகர்வுகளை மேற்கொண்டுவரும் அமைப்புகள் முழுமையாக இந்துத்துவக் கருத்துக்களை ஏற்றுச் செயல்படுத்துவதும், இந்து அமைப்புகளுக்கு அங்கீகாரம் வழங்குவதும் வெளிப்படையாக நடந்து வருகின்றன. இந்தப் போக்கு ஆரோக்கியமானதா? என்ற ஒரு விவாதத்தை எழுப்பவே இக்கட்டுரை.

**இந்துத்துவ அமைப்புகளுடன் புலிகளின் முன்னணி அமைப்புகளின் உறவு**

1. விடுதலைப்புலிகளின் அரசியல் செயல்தளமாகக் கருதப்படும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு 2006 லிருந்து இந்தியாவில் உள்ள பார்ப்பன சாமியார்களையும், பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநிறுத்தப் பாடுபடும் அமைப்புகளையும் தொடர்ச்சியாகச் சந்தித்து வருகின்றது.

கடந்த 2006 ஆம் ஆண்டு வாழும் கலை ஸ்ரீஸ்ரீ ரவிசங்கருடன் இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்து, ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண உதவும்படிக் கேட்டுக்கொண்டனர்.

2. கடந்த 2008 ஆம் ஆண்டு டிசம்பரில் இதே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் அவர்கள் இந்தியாவில் பார்ப்பன அதிகார பீடமான காஞ்சி சங்கரமடத்தின் தலைவன் இருள்நீக்கி சுப்பிரமணியத்தை ( ஜெயேந்திரன்) சென்னையில் உள்ள சங்கராலயத்தில் நேரில் சந்தித்துள்ளார்.

சங்கராச்சாரியைச் சந்தித்த பிறகு விஷ்வ ஹிந்து பரிஷத் அகில உலகப் பொதுச்செயலாளர் அசோக் சிங்கால், தமிழ்நாட்டுத் தலைவர் வேதாந்தம், ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் பொதுச் செயலாளர் சுரேஷ் ஜோஷி, பாரதீய ஜனதாவின் முக்கியத் தலைவர் எல்.கே.அத்வானி ஆகியோரை எம்.கே.சிவாஜிலிங்கம் அவர்கள் நேரில் சந்தித்துப் பேசியுள்ளார்.

“இந்து ஆலயங்கள் பலவற்றைச் சிங்களப் படையினர் கைப்பற்றி வைத்திருப்பதாகவும், இந்து ஆலயங்களின் உடைமைகள் சேதமாக்கப் பட்டிருப்பதாகவும்,இலங்கையில் இந்துக் கலாசாரம் கேள்விக் குறியாக்கப் பட்டிருப்பதாகவும், சிங்களர்களிடமிருந்து இந்துக்களையும், இந்துப் பண்பாட்டையும் காப்பாற்றுமாறும் வேண்டுகோள் விடுத்ததாக முன்னணி தமிழ், ஆங்கில ஏடுகள் அப்போது செய்தி வெளியிட்டன.

3. இந்தச் சந்திப்புகளின் போது அசோக் சிங்காலும், சுரேஷ் ஜோஷியும் இந்து ஆலயங்களைத் தாக்குவதை அனுமதிக்க முடியாது என ஒப்புக்கு ஒரு அறிக்கை வெளியிட்டனர். அடுத்த ஆறு மாதத்தில் ஈழத்தில் மிகப்பெரும் இனஅழிப்பு நடந்தது. அந்தச் சூழலில் 2009 மே மாதத்தில் நடைபெற்ற இந்திய பாராளுமன்றத் தேர்தலில் தென்சென்னைத் தொகுதி வேட்பாளராகப் போட்டியிட்ட பா.ஜ.க தலைவர் இல.கணேசனுக்கு ஆதரவாகத் தேர்தல் பிரச்சாரத்திலும் இறங்கினர் சிவாஜிலிங்கம்.

4. 2013 ல் திலீபனின் நினைவு நாளில் விடுதலைப்புலிகளின் அதிகாரப்பூர்வ இணையதளமான புலிகளின் குரல் தளத்தில் இந்துமக்கள் கட்சித் தலைவர் அர்ஜூன் சம்பத்திடன் நேர்காணல் எடுக்கப்பட்டு பதிவேற்றப்பட்டுள்ளது.

சிவசேனாவின் பால்தாக்கரே கூட விடுதலைப்புலிகளை ஆதரித்தார். ஜெயேந்திர சங்கராச்சாரி 1990 லேயே தோழர் பிரபாகரனை ஆதரித்து அறிக்கை வெளியிட்டார் என்றெல்லாம் தகவல்கள் கிடைக்கின்றன. ஆனால் அவற்றுக்கு சரியான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. இப்படி கிடைத்துள்ள சிறிதளவு தகவல்களை வைத்துப் பார்த்தால் புலிகளின் முன்னணி அமைப்பு இந்தியாவில்



உள்ள பார்ப்பன ஆதிக்க பீடங்களுடன் தொடர்பில் இருந்திருக்கிறது என்பது தெரிகிறது.

ஒருவேளை அந்த அணுகுமுறை ஈழவிடுதலைக்குப் பயன்படும் என அந்த அமைப்பு நிலைப்பாடு எடுத்திருக்கலாம். ஆனால் அந்த அணுகுமுறை ஈழவிடுதலைக்குப் பயன்பட்டதா? ஈழவிடுதலைப் பாதையை திசைதிருப்பியதா? என்பதை நாம் ஆராய வேண்டும். என்னதான் நாம் நமது தன்மையை மாற்றி பார்ப்பன அமைப்புகளுடன் சமரசமாகப் போக நினைத்தாலும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பும், சங்கர மடப் பார்ப்பனர்களும் ஈழவிடுதலைக்கு எதிராகவே இருக்கின்றனர் - சிங்களனையே தமது உறவாக எண்ணுகின்றனர் என்பவைகளை அடுத்தடுத்த ஆண்டுகளில் நடைபெற்ற நிகழ்வுகள் உறுதிசெய்தன.

**சிங்கள அரசு–ஆர்.எஸ்.எஸ். கூட்டுச் செயல்பாடுகள்**

2009 இல் ஒன்றரை இலட்சம் தமிழர்களை இனப்படுகொலை செய்து, பேரழிவை உண்டாக்கி ஆயுதப்போரை ஒரு முடிவுக்குக்கொண்டுவந்த இலங்கை அரசு, அதே நேரத்தில் சுமார் 3 இலட்சம் தமிழர்களை முள்வேலிமுகாம்களில் அடைத்திருந்தது. சிறைச்சாலைகளைவிடக் கொடுமையான அந்த முள்வேலி முகாம்களில் உள்ள தமிழர்களுக்கு சிங்கள அரசு அடிப்படைத் தேவைகளைக்கூட வழங்கவில்லை. சர்வதேச அளவில் போர்க் காலங்களில் நிவாரணப் பணியாற்றும் பல்வேறு நிறுவனங்கள் இலங்கை அரசிடம் வேண்டுகோள் விடுத்தன. தமிழர்கள் பகுதியில், முள்வேலி முகாம்களில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அனுமதி கோரி இருந்தனர். ஆனால் சிங்கள அரசு எந்த நிறுவனத்தையும் உள்ளே அனுமதிக்கவில்லை.

செஞ்சிலுவைச்சங்கத்தின் அலுவலகங் களைக்கூட மூடிவிடுமாறு சிங்கள அரசு நிர்ப்பந்தித்தது. ஐரோப்பிய நாடுகளில் பொருள்திரட்டி வந்த வணங்காமண் கப்பல்கூட தடுக்கப்பட்டிருந்தது.

ஆனால், ஆர்.எஸ்.எஸ். முன்னணி அமைப்பான 'சேவா இன்டர்நேஷனல்' (Seva Inetnational) என்ற அமைப்புக்கு மட்டும் நிவாரணப்பணிகளை மேற்கொள்ள அனுமதி கிடைத்தது. அந்தச் சமயத்தில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் நேரடியாக முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா போன்ற பகுதிகளில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டது. ஈழப்பகுதியில் 50 கிராமங்களைத் தத்தெடுத்தது.

சேவா இன்டர்நேஷனல் மட்டுமல்ல, இந்துத்துவ அமைப்புகளான ஸ்ரீஸ்ரீ ரவிஷங்கர் தலைமையிலான 'வாழும் கலை' மற்றும் சாய் ஸமிதி, சின்மயா மிஷன் போன்ற அமைப்புகளும் அனுமதிக்கப்பட்டன. விஸ்வ ஹிந்து பரிஷத்தைச் சார்ந்த கிராமப்புற பூஜாரிகள் இலங்கைக்குச் சென்றனர்.

நிவாரணப் பணிகள் நடைபெறும் இடங்களி லெல்லாம் பஜனைக் குழுக்களையும் உருவாக்கினர். ஆடி அம்மாவசைப் பூஜைகளை நடத்தினர். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஸ்ரீஸ்ரீ ரவி சங்கரின் தலைமையில் மிகப் பெரும் அளவிலான மஹா ருத்திர பூஜைகள், யாகங்கள், பஜனை விழாக்கள் நடத்தப்பட்டன.

ஆர்.எஸ்.எஸ்ஸின் தமிழ்நாட்டுப் பொறுப் பாளர் எம்.எல்.இராஜா என்பவர் சென்னையில் 2013 மார்ச் 19 ல் நடந்த பத்திரிக்கையாளர் சந்திப்பு ஒன்றில், "சேவா இன்டர்நேஷனல் என்ற அமைப்பு வழியாக உலகெங்கும் நிதிதிரட்டி இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உதவினோம்" என்றார். 2003 லிருந்து தொடர்ச்சியாக தாம் இலங்கை மற்றும் ஈழப்பகுதிகளுக்குச் சென்று வருவதாகவும் தெரிவித்தார்.

2004 ல் சுனாமியால் பேரழிவு நடந்தபோது சேவா இன்டர்நேஷனல் அமைப்பு குஜராத்திலிருந்து மருத்துவர்குழுவையும், ஆர்.எஸ்.எஸ். சேவைக்குழுவையும் அழைத்துச் சென்றிருக்கிறது. அப்போதும் சிங்கள அரசு ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு அனுமதி வழங்கியுள்ளது.

குஜராத்தில் இரத்த வேட்டையாடிய கும்பல் இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமாம். வெறும் சேவை என்ற நோக்கில் மட்டும் ஆர்.எஸ்.எஸ். அமைப்போ. அதன் முன்னணி அபைப்புகளோ எந்தப்பணியையும், எப்போதும் செய்யாது என்பதை அரசியலில் உள்ள அனைவரும் நன்கு அறிவார்கள்.

**விடுதலைப்புலிகளைக் குற்றம் சுமத்திய ஆர்.எஸ்.எஸ்.**

ஐ.நா. மனிதஉரிமைக் கவுன்சிலில், 2012 ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கக் கூடாது என்று ஆர்.எஸ்.எஸ் வலியுறுத்தியது. அந்த அமைப்பின் அதிகாரப்பூர்வ ஏடான 'ஆர்கனைசர்' இதழின் தலையங்கத்தில் இந்தக் கருத்து வலியுறுத்தப்பட்டது.

"இலங்கையைக் கண்டிக்கும் வகையில் அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை




இந்தியா எதிர்க்க வேண்டும். இதில் இந்தியா தயக்கம் காட்டினாலோ அல்லது நடுநிலை வகித்தாலோ, பின்னாளில் இந்தியா சிக்கலான நிலைக்குத் தள்ளப்படும்'' என்றும்,

"ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப் பட்ட ஓர் அரசுக்கு உத்தரவு பிறப்பிக்கவோ, உலக அமைப்பில் அதை சிறுமைப்படுத்தவோ, அமெரிக்காவுக்கும் மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் எந்த உரிமையும் இல்லை. உள்நாட்டுப் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டியது இலங்கை அரசின் கடமை. மற்ற நாடுகள் இதில் தலையிட முடியாது'' ...

..."இறுதிக்கட்டப் போர் நடந்தபோது, விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைமை பிறப்பித்த உத்தரவுகளை மீறியதற்காக, ஆயிரக்கணக்கான தமிழர்கள் புலிகளால் கொல்லப்பட்டனர். அந்தநேரத்தில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் போர்க் குற்றங்கள் தொடர்பான பிரச்சினை எழுப்பத் தவறியது ஏன்?''

என்று இலங்கை சிங்கள அரசுக்கு ஆதரவாகவும், விடுதலைப்புலிகளுக்கு எதிராகவும் அறிக்கை வெளியிட்டது ஆர்.எஸ்.எஸ் (பி.பி.சி தமிழ் 18.03.2012 )

**பொதுபலசேனா–ஆர்.எஸ்.எஸ்.இனப்படுகொலைக் கூட்டணி**

சில நாட்களுக்கு முன்பு இலங்கையின் சிங்கள பயங்கரவாத இயக்கமான பொதுபலசேனா இந்துத்துவ இயக்கமான ஆர்.எஸ்.எஸ் அமைப்புடன் இணைந்து செயல்பட உள்ளதாக அறிவித்தது. மேலும் கீழை நாடுகளில் உள்ள பல்வேறு பவுத்த இயக்கத் துடன் பேசி வருவதாகவும், அடுத்த ஆண்டு வைசாக் அன்று இலங்கையில் பவுத்த இந்து அமைப்புகள் இணைந்து மாநாடு ஒன்று நடத்தவிருப்பதாகவும் செய்திகள் வந்தது. இதில் முக்கியமான அமைப்பு ஒன்று தானாகவே முன்வந்து கரம் கோர்த்துள்ளது, அந்த அமைப்பு பர்மாவில் உள்ள ரெஹிங்கோ இஸ்லாமிய கலவரத்தில் தொடர்பு கொண்ட மியன்மர் 969 அமைப்பு என்ற அமைப்பாகும்.

புத்தமதத்திற்கும் இந்துத்துவாவிற்கும் என்ன தொடர்பு என்று கேள்வி வைக்கப் பட்டால் ஒரு உண்மை அனைவரும் தெரிந்து கொள்ளவேண்டும். இலங்கையில் இருக்கும் தேரவாத புத்தம் என்பது பார்ப்பனிய வகைப் பட்ட புத்தவாதம். இன ஒதுக்குதலையும், இனவெறியையும் உள்ளே வைத்து செயல்படும் பவுத்தம் உண்மையான பவுத்தமல்ல.

மேற்கண்ட செய்தியை ஆர்.எஸ்.எஸ். அமைப்பு தற்போது மறுத்திருக்கிறது. ஆனாலும் ஆர்.எஸ்.எஸ். தமது பெரும்பாலான செயல்களை வெளிப்படையாக அறிவித்துக்கொண்டு செய்ததில்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

**இலங்கை – இந்தியா கூட்டாக அஸ்வமேத யாகம்**

இலட்சக்கணக்கான தமிழர்களைப் பலிகொடுத்த நாமும் யாகம் நடத்துகிறோம். நமது இனத்தைப் படுகொலை செய்த சிங்கள அரசும் யாகம் நடத்துகிறது. அதாவது போர் தோஷத்தைக் கழிப்பதற்கு இலங்கை அரசு சார்பிலேயே 3 கோடி ரூபாய் செலவில் மிகப்பெரிய அளவில் யாகம் நடத்துகிறது. அதுவும் அஸ்வமேத யாகம். இந்த யாகத்தில் இந்தியா, இலங்கையை சேர்ந்த 40க்கும் மேற்பட்ட பார்ப்பனர்கள் பங்கேற்கிறார்கள்.

1983 ஆம் ஆண்டு இனப்படுகொலை நடத்தி முடித்தவுடன் அப்போது அமைச்சராக இருந்த இராசதுரை என்பவர் பிரேமதாஸாவின் நிதி உதவியுடன் பம்பலப்பிட்டியில் முதன்முறையாக

இலங்கையில் அஸ்வமேத யாகம் நடத்தினார். இப்போது 2 வது முறையாக 2013 இல் மே 23 முதல் தொடர்ந்து 10 நாட்களுக்கு காரைநகர் மணல்பிட்டி புகலி சிவசுப்பிர மணியசுவாமி ஆலயத்தில் இந்த அஸ்வமேத யாகம் நடைபெற்றது.

**இலங்கையில் சீதைக்குக் கோவில் கட்டும் பா.ஜ.க**

இலங்கையில் நுவரெலியாவிலிருந்து பண்டாரவளைக்குச் செல்லும் வழியில் உள்ள 'சீதா எலிய' என்ற இடத்தில் இராமாயணக் கதாநாயகி சீதைக்கு கோவில் கட்ட மத்தியபிரதேச மற்றும் மத்திய அரசுகள் முடிவு செய்துள்ளன. இதற்கான இடத்தை இலங்கை அரசு வழங்குகிறது. மத்தியப்பிரதேச அரசு 2 கோடி ரூபாய் செலவில் சீதைக் கோவிலைக் கட்டப்போவதாக முதல்வர் சிவராஜ்சிங் சவுகான் அறிவித்துள்ளார். இந்தியாவில் இராமர் கோவில் இலங்கையில் சீதைக் கோவில் இதுதானே பா.ஜ.க வின் நோக்கம்.

**தமிழீழ விடுதலையா? இந்துஈழவிடுதலையா?**

இந்து அமைப்புகளுக்கும், இந்தியப் பார்ப்பன அதிகார மய்யங்களுக்கும் நாங்கள் எதிரிகள் இல்லை என்பது போன்ற ஒரு அணுகுமுறையை புலிகளின் முன்னணி அமைப்புகளோ அல்லது புலிகளின் ஆதரவாளர்களோ மேற்கொண்டாலும் இந்தியாவில் உள்ள பார்ப்பன மய்யங்களும், ஆர்.எஸ்.எஸ். அமைப்பும், அதன் முன்னணி அமைப்புகளும் நம்மைத் துளிகூட நம்பவில்லை. ஈழவிடுதலையை ஏற்கவில்லை. சிங்களனுக்கே விசுவாசமாக இருக்கின்றன என்பதை அவர்களது அண்மைக்கால நடவடிக்கைகளிலிருந்து நாம் நேரடியாகப் பார்த்து வருகிறோம்.

இந்த நிலையில் ஈழவிடுதலை என்ற தளத்தில் மீண்டும் மீண்டும் இந்து அமைப்புகளுடன் கைகோர்ப்பதும், பார்ப்பனப் பண்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதும் என ஈழவிடுதலை ஆதரவாளர்கள் தங்களது போக்கில் இன்னும் தீவிரமாகவே செல்கின்றனர்.

**1.நாடுகடந்த தமிழீழ அரசு**

நாடு கடந்த தமிழீழ அரசு, கடந்த 2012 ஆம் ஆண்டு மே 12 ஆம் நாள் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை, தமிழினப்பேரழிவு நடந்த நாளின் நினைவாக ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்தது. இலங்கை இராணுவத்தைக் கண்டித்துப் போராட்டமா? இனப்படுகொலைக்குத் துணை நின்ற இந்தியாவைக் கண்டித்துப் போராட்டமா? ஐ.நாவுக்கு கோரிக்கை எழுப்பும் நிகழ்ச்சியா? குறைந்தபட்சம் கண்டனக் கருத்தரங்கமா? பொங்குதமிழ் விழா போன்ற நிகழ்வா? இவை எதுவும் இல்லை. அவர்கள் நடத்தியது 'ஏகாதச ருத்திர மஹா யாகம்.'

ஆம், பல்வேறு பெரியார் தொண்டர்கள் - திராவிடர் இயக்கத் தோழர்கள் தமது சொத்துக்களை இழந்து, சுகங்களை இழந்து, பல உயிர்களை இழந்து, அமைப்புகளையே இழந்து வலுப்பெற்றது ஈழவிடுதலைப் போராட்டம். சுமார் 30 ஆண்டு காலம், திராவிடர் இயக்கத்தின் ஒரு தலைமுறையே முழு பலத்தையும் திரட்டிக் கொடுத்து நடந்தது ஈழவிடுதலைப் போராட்டம்.

அப்படிப்பட்ட வரலாறுகொண்ட போராட்டத் தின் தற்போதைய நிலை 'ஏகாதச ருத்திர மஹா யாக'மாம். இதற்கு ஏன் ஒரு அமைப்பு? அந்த அமைப்புக்கு ஒரு பிரதமர்; அந்தப் பிரதமருக்கு உதவியாக உலகின் பல நாடுகளில் அமைச்சர்கள்; பாராளுமன்ற உறுப்பினர்கள்; அதற்கு ஒரு தேர்தல்; இவ்வளவும் எதற்காக? நான்கு பார்ப்பனர்களை வைத்து யாகம் நடத்தியே ஈழத்தை வாங்கிடலாமே?

விடுதலைப்புலிகளின் இலக்கு என்ன என்பதைத் தெளிவாக விளக்கும் ஆவணம் ஒன்றை விடுதலைப் புலிகள் அமைப்பு அதன் தொடக்கக் காலங்களிலேயே வெளியிட்டது. 'சோசலிசத் தமிழீழம்' என்ற பெயரில் அந்த ஆவணம் சிறு நூலாகவும் வெளிடப்பட்டது. அந்த ஆவணத்தில், 'அடிப்படை அரசியல் இலட்சியங்கள்' என்ற தலைப்பில்,

**"விடுதலைப்புலிகள் உருவாக்க விருக்கும் சுதந்திரத் தமிழீழம் ஒரு மக்கள் அரசாகத் திகழும். மதச்சார்பற்ற - ஜனநாயகச் சோசலிச அரசாக அமையும்." "தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் மதச்சார்பற்ற நிலைப்பாட்டைக் கடைபிடிக்கும்."**

என்று தமது மதச்சார்பற்ற தன்மையைத் தெளிவாக விளக்கியுள்ளனர்.

ஆயிரக்கணக்கான உயிர்களை இழந்து, இனப்படுகொலையின் உச்சக்கட்டக் கோரத்தை அனுபவித்த ஒரு இனத்தை வழிநடத்த வேண்டிய இடத்தில் இருக்கும் ஒரு அமைப்பு - அடுத்த கட்ட நகர்வைச் செய்ய வேண்டிய அமைப்பு இப்படி இந்துப் பார்ப்பனர்களிடம் சரணடைய வேண்டிய தேவை என்ன? வரலாற்றில் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக இந்த யாகப்புகையில் சிக்கித்தானே பல அரசுகள் சீரழிந்தன. பூணூலில் சுருக்கு மாட்டித்தானே ஆண்டாண்டு காலமாக தமிழர் தலைமுறைகள் தடந்தெரியாமல் அழிந்தன. மீண்டும் அந்த அழிவு வரலாற்றைத் தொடங்க வேண்டிய அவசியம் என்ன? அதுவும் புலிகளின் 'மதச்சார்பற்ற சோசலிசத் தமிழீழம்'



முப்பத்து முக்கோடி தேவர்கள் இருந்தும், இந்தியாவில்
மூன்று கோடிப்பேருக்கு உணவும் வேலையும் இல்லையே ஏன்?

என்ற இலட்சியத்துக்கு நேர் எதிராகச் செயல்பட வேண்டிய தேவை என்ன?

**2.பிரிட்டானியத் தமிழர் பேரவை**

இங்கிலாந்து நாட்டில் வசிக்கும் சுமார் ஐந்து லட்சம் இலங்கைத் தமிழர்களை ஒருங்கிணைக்கின்ற அமைப்பாக உள்ள பிரித்தானியத் தமிழர் பேரவை மற்றும்,இங்கிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுமார் 80 பேர் வரை உறுப்பினராக உள்ள தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டுக்குழு (All Party Parlimentary Groups for Tamils). இந்த இரண்டு அமைப்புகளும் இணைந்து பிரிட்டிஷ் நாடாளுமன்ற வளாகத்திலேயே, இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்று வரும் இனப்படுகொலை குறித்து ஒரு சர்வதேச சுதந்தி விசாரணை கோரி (International Independent Investigation)இலண்டனில் 2012ஆம் ஆண்டு நவம்பர்7,8,9 தேதிகளில் உலகத் தமிழர் மாநாட்டை நடத்தினர். அந்த மாநாட்டில் பெரியார் சிலையை உடைத்த அர்ஜுன் சம்பத்தும் முக்கிய விருந்தினராகப் பங்கேற்றுள்ளார். பிரித்தானியத் தமிழர் பேரவையால் அழைக்கப்பட்டு சிறப்பிக்கப் பட்டுள்ளார்.

**3.சுவிஸ்:மாவீரர் நாளுக்கு மாற்றாக சிவன்கோவில் களில் வழிபாடு**

தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் உயிர் நீத்த அனைத்து விடுதலை வீரர்களுக்கும், பொதுமக்களுக்குமாக நினைவாலயம் ஒன்று சுவிஸ், சூரிச் அருள்மிகு சிவன் கோவிலில் சைவத்தமிழ் சங்கத்தினால் அமைக்கப் பட்டுள்ளது. இம்மாவீரர் நினைவாலயம் 2011 ஆம் ஆண்டு நவம்பர் 25 ல் திறக்கப்பட்டது.

“புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ளவர் களுக்கு முன்மாதிரியாக சுவிஸ் சூரிச் சிவன்கோவிலில் மாவீரர் நினைவாலயம் அமைக்கப்பட்டுள்ளது. போட்டிகள் மோதல்கள், வியாபார நோக்கங்களுக்குள் சிக்காது சூரிச் சிவன்கோவில் போன்ற ஆலயங்களில் அமைக்கப்படும் நினைவாலயங் களுக்குச் சென்று அகவணக்கம் செலுத்துவதே மாவீரர்களின் ஆத்மசாந்தியாக இருக்கும். சூரிச் சிவன் கோவில் நிர்வாகம் செய்திருக்கும் இந்த உயரிய பணியை புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள அனைத்து சைவ ஆலயங்களும் செய்ய வேண்டும். இதுவே மாவீரர்களுக்கும் மக்களுக்கும் அமைதியை தேடித்தரும்.

புலம்பெயர் தமிழர்கள் தமிழர் விழுமியங்களையும், பண்பாட்டையும், தெய்வவழிபாட்டையும் கைவிடாது தமிழுக்காவும், சைவசமயத்திற்காகவும் அரும்பாடு பட்டு உழைத்து வரும் நாம் எமது விடுதலைக்காக உழைத்து உயிர்நீத்த எமது உடன்பிறப்புகளுக்கு நினைவாலயம் அமைத்து அவர்களை மறவாது தெய்வங்களுக்கு இணையாக ஆலயத்திற்குள்ளேயே வழிபடவேண்டும் என்பதற்காக சுவிஸ் சூரிச் சிவன் கோவிலில் நினைவாலயம் அமைக்கப்பட்டுள்ளது” என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

இந்த சைவத்தமிழ்ச்சங்கத்திற்கும் விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரிய வில்லை. இருந்தாலும், மாவீரர் நாளின் நோக்கத்திற்கு எதிராக மக்களைத் திசைதிருப்பி பூஜை புனஸ்காரங்கள் நடத்தப்படுகின்றன. அதைத் திட்டமிட்டு ஏதோ ஒரு அமைப்பு செயல்படுத்துகிறது.

**4. முள்ளிவாய்க்கால் முற்றம்**

தமிழ்நாட்டில் திராவிடர் இயக்கங்களைத் தவிர மற்ற அமைப்புகளைச் சேர்ந்த ஈழவிடுதலை ஆதரவாளர்கள் என்றால் அதில் மிக முக்கியமானவர்கள், தொடர்ச்சியாக நீண்டகாலமாக ஈழத்திற்காகப் பணியாற்று பவர்கள் என தமிழர்தேசியமுன்னணி தலைவர் பழ.நெடுமாறன் மற்றும் ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோ ஆகிய இருவரைத்தான் சொல்ல முடியும்.

முள்ளிவாய்க்கால் முற்றத்தில் பெரியார் படம் வைக்கப்படவில்லை என்ற விவாதம் பெரிய அளவில் நடந்தது. என்னைப் பொறுத்தவரை அதைவிட முக்கியமாக நடந்திருக்க வேண்டிய விவாதம் வேறு. அது நடக்கவே இல்லை. அதாவது, முற்றத்தின் நிறுவப்பட்டுள்ள பாவை விளக்கு.

ஈழத்தில் மாவீரர் துயிலுமில்லங்களில், மாவீரர் நினைவு நாட்களில் ஈகைச்சுடர்கள் தான் ஏற்றப் பட்டிருக்கின்றன. ஒரு போர் அவலத்தின் நினைவிடத்தின் நோக்கம், மீண்டும் நம்மைப் போருக்குத் தயாரிப்பதாகத்தான் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட சிலைகள், உருவங்கள்தான் அங்கு இருக்க வேண்டும். ஆனால் இந்து மதத்தின் கோவில்களில் இருக்கும் -இந்து மதத்தின் அடையாளமாக இருக்கும் ‘பாவைவிளக்கு’ என்பதை முள்ளிவாய்க்கால் முற்றத்தில் மிகப்பெரிய சிலையாக-முதன்மையாக நிறுவியிருப்பதன் அவசியம் என்ன என்று தெரியவில்லை.



பசியால் வாடும் குழந்தைக்குப் பால் கிடைக்காத நாட்டில்
கல் பொம்மைக்குப் பால் அபிஷேகம் ஒரு கேடா?



விடுதலைப்புலிகள் அமைப்பு வெளியிட்டுள்ள மாவீரர்நாள் கையேட்டின் 12 ஆம் பக்கத்தில் 'தவிர்க்க வேண்டியவை' என்ற பட்டியலில் 'மங்கல விளக்கு' உள்ளது. மாவீரர் நாளுக்குரிய நோக்கமும் முள்ளிவாய்க்கால் முற்றத்தின் நோக்கமும் ஒன்றுதானே? பிறகு ஏன் இந்து மதத்தின் அடையாளமான 'பாவை விளக்கு' என்ற 'மங்கல விளக்கு' அங்கே முதன்மைப்படுத்தப் பட்டுள்ளது?

**5. மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்**

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த சில ஆண்டுகளாக தோழர் பிரபாகரன் பிறந்த நாளான நவம்பர் 26 ல் இந்துக் கோவில்களில் சிறப்பு வழிபாடுகளை நடத்தி வருகின்றது. 2013 ஆம் ஆண்டு திருப்பூரில் விநாயகர் கோவில் மற்றும் ஈஸ்வரன் கோவிலில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. 2014 ஆம் ஆண்டில் திருப்பூர், ஈரோடு, தென்காசி போன்ற பல நகரங்களில் கோவில்களில் பொங்கல் வைத்தும், சிறப்பு வழிபாடு நடத்தியும் பிறந்தநாள் விழாக்கள் நடைபெற்றன. திருப்போரூர் அருள்மிகு கந்தசாமி திருக்கோயிலில் சிறப்பு அன்னதானம் நடத்தப்பட்டது. கோவிலின் விளம்பரப் பலகையிலேயே அன்னதானத்தின் உபயதாரர் மேதகு பிரபாகரன், கிளிநொச்சி என்றே எழுதப்பட்டது. இந்திய இராஜபக்சேவான மோடியுடன் கூட்டு சேர்வதற்கு வை.கோ கூறிய ஒரே காரணம், ஈழவிடுதலை என்பது மட்டுமே. வாஜ்பாய் ஆட்சிக்காலத்தில் புலிகளுக்கு உதவி செய்தார் என்ற பொய்யையும் கூறி தனது கூட்டணியை உறுதிப்படுத்தினார்.

**6.தமிழ்நாட்டில் இந்துமுன்னணி யாகம்**

இலங்கையில் 545 இந்துக் கோவில்கள் இடிக்கப்பட்டதைக் கண்டித்தும், ஈழத்தமிழர் களின் வாழ்வாதாரத்தை மீட்கவும், அவர்கள் நலமுடன் வாழவும் இந்து முன்னனி சார்பில் கொடுங்கையூர் முத்தமிழ் நகரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் சிறப்பு யாகம் நடைபெற்றது. இந்து முன்னணியினர் 100 க்கும் மேற்பட்டோர் கொடுங்கையூர் பவானி அம்மன் கோவிலில் சிறப்பு பூஜை செய்து ஊர்வலமாகத் திருமண மண்டபத்திற்கு வந்தனர். இந்த சிறப்பு யாகத்திற்கு இந்து முன்னணி அமைப்பாளர் இராமகோபாலன் தலைமை தாங்கினார்.

**7.அய்யனார் கோவில்களில் பிரபாகரன் சிலை - இந்து மக்கள் கட்சி**

இந்து மக்கள் கட்சி மாநில இளைஞரணி பொதுச்செயலர் குருமூர்த்தி என்பவர், " தமிழகம் முழுவதும் உள்ள அய்யனார் கோயில்களில் வீரன் சிலை அமைப்பது வழக்கம். அந்த வகையில் தமிழர்களுக்காக போராட்டம் நடத்தி பல்வேறு இன்னல்களை நீக்கிய விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரனைத் தமிழர்கள் வீரராகப் போற்றுவதும், அவரை வழிபடு வதையும் வழக்கமாகக் கொண்டுள்ளனர். இதனால் தெற்குப் பொய்கை நல்லூரில் உள்ள கோவிலில் அவரின் சிலையை அமைத்து வழிபட்டு வந்தனர். தற்போது அந்தச் சிலை அகற்றப்பட்டுள்ளது வேதனை அளிப்பதாக உள்ளது.

கடந்த பாஜக ஆட்சியில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் படத்தை பயன் படுத்துவது சட்டப்படி தவறு கிடையாது என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. எனவே தமிழகத்தில் உள்ள அனைத்து அய்யனார் கோவில்களிலும் பிரபாகரன் சிலையை அமைக்க தமிழக அரசு அனுமதி வழங்க வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார். தெற்குப் பொய்கை நல்லூரில் தோழர் பிரபாகரன் சிலை அகற்றப்பட்டதைக் கண்டித்து ம.தி.மு.க பொதுச்செயலாளர் வை.கோ,சீமான் ஆகியோர் கண்டன அறிக்கை களையும், ஆர்ப்பாட்டங்களையும் நடத்தினர்.

**8.வட மாகாண முதலமைச்சர் தலைமையில் வழிபாடுகள்**

2015 மே 18 ல் வடதமிழீழத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் கீரிமலை நகுலே வரம் கோவிலில் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ் மாவட் அமைப்பாளர் துவாரகேசுவரன் ஏற்பாட்டில் நடைபெற்ற முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த மக்களுக்கான சிறப்பு வழிபாட்டில் வட மாகாண அவை முதலமைச்சர் திரு.விக்கினேசு வரன் மற்றும் வடமாகாண அவை உறுப்பினர் ஆனந்தி சசிதரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

2015 மே 20 ல் முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்டவர்களின் ஆத்ம சாந்திக்காக புதுக்குடியிருப்பு சிவன் கோயிலில் விசேடபூசை வழிபாடுகள் நடை பெற்றன. வட மாகாண சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற

இந்த சிறப்பு வழிபாட்டில் வட மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரு மான மாவை சேனாதிராசா மற்றும் வட மாகாண சபை உறுப்பினர்கள் உட்பட பிரதேச சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டார்கள். முக்கியமாக இந்த வழிபாடுகளில் பார்ப்பனர் களுக்கு தானங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**வடக்கின் வசந்தம்**

2009 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் சிங்கள அரசு முள்வேலி முகாம்களுக்குள் மக்களை அடைத்துவிட்டு அவர்களது நிலங்களை அபகரிக்க வடக்கின் வசந்தம் என்ற பெயரில் ஒரு திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கியது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஈழவிடுதலை ஆதரவாளர்களும் இதைக் கடுமையாக எதிர்த்தனர்.

அனைத்தையும் மீறி, வடபகுதியில் இடம்பெயர்ந்துள்ள தமிழ் மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கை களுக்காக புதுடில்லி வழங்கியுள்ள 500 கோடி இந்திய ரூபாய் திட்டத்தில் பார்ப்பன எம்.எஸ்.சுவாமிநாதன் பவுண்டேசன் நிறுவனம் பங்காற்றியது. அதை நாம் யாரும் தடுக்க முடிய வில்லை.

இந்தத் திட்டத்தின் கீழ் வட ஈழ மக்களின் உடல்நல சேவைக்காக இலங்கை அரசுக்கு உலக வங்கி 2.4 கோடி டாலரைக்கடனாக அளித்துள்ளது. மீள் கட்டுமானத்திற்காக 30 கோடி டாலர் கடனை ஆசிய வளர்ச்சி வங்கி அளித்துள்ளது. உலக வங்கியின் உதவிக்கோ, ஆசிய வளர்ச்சி வங்கியின் உதவிக்கோ தமிழ்நாட்டில் எந்த எதிர்ப்பும் வரவில்லை. குறிப்பாக ஆர்.எஸ்.எஸ். அமைப்பு வடக்கு, கிழக்குப் பகுதியில் அனுமதிக்கப் பட்டதற்கும் எந்த எதிர்ப்பும் எழவில்லை.

திரைப்பட நடிகை அசின், சல்மான்கான், விவேக் ஓபராய், ஏர்டெல், த்ரிஷா என பல்வேறு எதிர்ப்புகளை அறிவித்தவர்கள் உலகவங்கி, ஆசியவளர்ச்சி வங்கி, ஆர்.எஸ்.எஸ். ஆகியவற்றின் நுழைவைத் தெரிந்தோ, தெரியாமாலோ கண்டுகொள்ளாமலேயே இருந்தனர்.

**மண்விடுதலையா? மக்கள் விடுதலையா?**

இப்படி ஈழவிடுதலைப் போராடுபவர் களும், அந்தப் போராளிகளை ஒடுக்குபவர்களும் இரண்டு தரப்புமே பார்ப்பன ஆதிக்கத்திற்கு சிறிதும் பங்கமில்லாமல் நடந்துகொள்கின்றனர். எனவே ஈழம் கிடைத்தாலோ.கிடைக்கா விட்டாலோ எப்படி இருந்தாலும் பார்ப்பனுக்கு எந்த நட்டமும் இல்லை என்ற போக்கு உருவாகுமானால் இலங்கையில் ‘தமிழீழம்’ என்ற பெயரில் மண்விடுதலை பெற்ற ஒரு நாடு உருவாகலாம். ஆனால் பார்ப்பன ஆதிக்கத்துடன் கூடிய விடுதலை என்பது அங்குள்ள மக்களுக்கு உண்மையான விடுதலையாகுமா?

கடந்த சில ஆண்டுகளாகவே தமிழ்நாட்டில் நடக்கும் ஈழவிடுதலை ஆதரவு ஆர்ப்பாட்டங்கள், பொதுக் கூட்டங்களில் இந்துத்துவ அமைப்புகளின் தலைவர்கள் பங்கேற்பது என்பது சாதாரண நடவடிக்கை களாகிவிட்டன. முதலில் தமிழ்த்தேசிய அமைப்புகள்தான் இப்படிப்பட்ட ஒருங்கிணைப்பை முன்னெடுத்தன. காலப்போக்கில் அந்த ஒருங்கிணைப்பில் பெரியார் அமைப்புகளும், இந்து அமைப்புகளும்கூட ஒரே மேடையில் பங்கேற்கும் சூழல் வந்துவிட்டது.

80 களில் இருந்தே மதுரை ஆதீனம் போன்ற ஆன்மீகத் தலைவர்கள் ஈழத்திற்கு ஆதரவாக இருந்தனர். ஆதீனத்துடன் நாம் இணைந்து பணியாற்றினோம். அதில் தவறில்லை. ஆனால் பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநிறுத்தப் போராடும் இந்து அமைப்புகளுடன் இணைந்து நிற்பது ஆபத்தான தொடக்கம் அல்லவா?

தமிழீழம் அமைவதற்கு எதிரியாக இருப்பவர்கள் சிங்களர்கள் மட்டுமல்ல. இங்குள்ள பார்ப்பனர்களும் தான். பார்ப்பன ஆதிக்கம் ஈழத்தில் இல்லை என்று ஈழத்தமிழர்கள் கூறலாம். ஆனால் இந்து மத சாஸ்திரங்களும், வேதங்களும் நிறுவியுள்ள இந்துப்பண்பாட்டைப் பின்பற்றாத - இந்து உளவியலில் வாழாத ஈழத்தமிழர்கள் யாரையும் நாம் பார்க்க முடியாது. ஒட்டுமொத்த தமிழக, தமிழீழத் தமிழர்கள் அனைவருமே பார்ப்பன இந்துப் பண்பாட்டில் அடிமைப்பட்டுத்தான் இருக்கிறார்கள். அனைவரது மூளைகளும் இந்துத்துவ விலங்கால் பூட்டப் பட்டுத்தான் உள்ளன.

ஈழவிடுதலை எதிர்ப்புக் களத்தில் இராஜபக்சே, மைத்ரி பால ஸ்ரீசேனா, ரணில் விக்கிரமசிங்கே, பார்ப்பன ஆர்.எஸ்.எஸ். இயக்கம், இ.காங்கிரஸ் கட்சி, சோ, சுப்பிரமணிய சாமி போன்ற பார்ப்பனர்கள், இந்திய வெளியுறவுத் துறை, உளவுத்துறைகளில் அதிகாரங்களில் வீற்றிருக்கும் பார்ப்பனர்கள் என அனைவருமே ஒன்றாகத்தான் நிற்கிறார்கள்.

எனவே, தமிழ்நாடு மற்றும் தமிழீழத் தமிழர்கள் அனைவருக்கும் ஒட்டுமொத்த

தொடர்ச்சி 27ஆம் பக்கம்



# அப்பன் தொழிலே தலையெழுத்தா...?

பொள்ளாச்சி சி.விஜயராகவன்

'பச்சைத் தமிழர்' காமராசரின் 112 ஆவது பிறந்தநாள் (15.07.1903-2015) திராவிடர் இனத்திற்குக் கல்வியும், அரசு வேலை வாய்ப்பும் பிறந்த நாள்... ஆம்... 1954 ஆம் ஆண்டு வரை திராவிடர் சமுதாய மக்களுக்கு குறிப்பாகத் தமிழர்களுக்கு எட்டாக் கனியாய், கானல் நீராய் இருந்த கல்வி மற்றும் வேலைவாய்ப்பைக் காட்டாறாகப் பாய விட்ட கல்வி வள்ளலின் பிறந்த நாள்

தகுதி, திறமை மோசடியைப் புறந்தள்ளிய பண்பாளர்...! காலமெல்லாம் நாத்தழும்பு ஏற கடவுள் மறுப்புப் பேசிய கலகக்காரத் தோழர் பெரியாரால் கல்விக்கண் தந்த கடவுள் காமராஜ் என புகழப்பட்ட ஏழைப் பங்காளர் காமராசரின் பிறந்த நாளில் அவர் முதல்வராக பதவி வகித்தக் காலத்தில் நடந்த சமூகநீதி நிகழ்வு ஒன்றைக் காட்டாறு பகிர்ந்து கொள்கிறது.

சென்னை சைதாப் பேட்டையைச் சேர்ந்த சலவைத் தொழிலாளி ஒருவர் அந்த நாளில் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு, அந்த வட்டார மக்களால் 'தியாகி' என்று அன்போடு அழைக்கப்பட்டார் அவரும், அவரது குடும்பத் தினரும் தங்கள் குடும்பத் தொழிலான துணி வெளுக்கும் வேலையையே செய்து கொண்டிருந்தனர்.

குடும்பவறுமையின் காரணமாக அரசியலில் அதிகமாக ஈடுபட முடியவில்லை. ஆனாலும், காங்கிரஸ்காரராகவே நீடித்தார். தலைவர் காமராசருக்கும் அறிமுகம் உண்டு. அந்தக் குடும்பத்தில் 3 ஆண் குழந்தைகள். முதல் இரண்டு பையன்களும் சரியாகப் படிக்காமல், தகப்பன் தொழிலையே செய்து கொண்டிருந்தனர். மூன்றாவது பையன் மட்டும் தட்டுத்தடுமாறி எஸ்.எஸ்.எல்.சி வரை படித்து, இறுதித் தேர்விலும் வெற்றி பெற்று விட்டான் ஆனால் மதிப்பெண் மிக மிகக் குறைவாக வாங்கியிருந்தான். எல்லாப் பாடங்களிலும் ஏதோ பேருக்கு மார்க் வாங்கித் தாண்டிக் குதித்திருந்தான். அதாவது சராசரி மதிப்பெண் 40 சதவீதத்திற்கும் கீழ்தான் இருந்தது.

இந்த நிலையில், அந்த ஆண்டில்தான் முதன் முதலாக 'ரேடியோ கிராஃபர்' எனப்படும் எக்ஸ்ரே டெக்னீசியன் படிப்பு அறிமுகப்படுதப் பட்டது. சென்னை மருத்துவக் கல்லூரியில் 12 இடங்களுக்கும், ஸ்டான்லியில் 8 இடங்களுக்கும் ஏராளமான விண்ணப்பங்கள் வந்து குவிந்து விட்டன. இந்தப்படிப்புக்கு அந்தச்சலவைத் தொழிலாளியின் மகனும் விண்ணப்பித்தான். இதைக்கேட்டவர்கள் அவனவனும் 600க்கு 400, 450வாங்கினவனெல்லாம் வரிசையில் நிக்கிறான். இவன் 230 வாங்கிட்டு, ரேடியோ கிராஃபர் சீட்டு கேக்குறான். விண்ணப்பத்தையே தூக்கிக்



கடவுளர் படங்களை நாத்திகர்கள் கொளுத்தினால் அலரும் பக்தர்கள்,
கடவுள் படம் போட்டபட்டாசுகளை கொளுத்தலாமா?

குப்பையில போட்டுடுவாங்க... என்று அவனைக் கேலிசெய்தனர்.

பையனின் தகப்பன் என்னிடம் வந்தார். தலைவர் காமராஜ் கிட்டே நீங்க ஒரு வார்த்த சொன்னா செய்திடுவார் என்றார். ஒரு தியாகியின் பிள்ளையாகவும் இருக்கிற ஏன்; தாழ்த்தப்பட்ட சமுதாயத்துப் பையனாகவும் இருக்கிறான். எதற்கும் சொல்லிப்பார்ப்போம் என்று அந்தப் பையனையும் தகப்பனையும் அழைத்துக் கொண்டு தலைவரிடம் போனேன். என்னய்யா தியாகி... என்ன சௌரி... என்ன விசயம்? என்றார் தலைவர். நான் விவரம் சென்னேன். அவர் உடனே , ஏம்பா... அந்த இருவது சீட்டுக்கும் எவ்வளவு நல்ல மார்க் வாங்கின பையனுங்க வந்திருக்காங்க தெரியுமா..? போட்டி கடுமையா இருக்கு..! என்றார்.

நான் தலைவரிடம் இந்தக் குடும்பமே துணி துவைக்கற தொழிலைத்தான் செய்து பிழைக்குது! அதில், இந்தப்பையன் மட்டும் ஏதோ எஸ்.எஸ்.எல்.சி வரைக்கும் வந்துவிட்டான். அய்யா மனசு வச்சீங்கன்னா, இவன் ஒருத்தனாவது அழுக்குமூட்டை சுமக்காமத் தப்பிச்சுக்குவான்... என்றேன். தலைவரின் மனப்பான்மையைத் தெரிந்துதான் இந்த விசயத்தை நான் தொட்டேன். நான் எதிர்பார்த்த படியே, அவன் சலவைத் தொழிலாளி மகன் என்னும் வார்த்தை அவரை உலுக்கிவிட்டது. அப்படியே மவுனமாய் உட்கார்ந்து விட்டார். பிறகு அவரே பேசினார்.

இந்த மாதிரி பிள்ளைங்கதான் மேலே வரணும்...சரி தான்... ரொம்பச் சரின்னேன்...! ஆனா, அந்தக் கம்யூனிட்டிகள்ளேயும், மார்க் அதிகமா வாங்கினவன் இருப்பானேப்பா...! என்று தனக்குத்தானே பேசிக்கொண்டு தலையைத் தடவிக்கொண்டார்.

அவர் இப்படிப் பேசினாலே, மனதுக்குள் அசைபோட ஆரம்பித்து விட்டார் என்று அர்த்தம். நான் மௌனமாய் உட்கார்ந்திருந்தேன். பையனின் தகப்பனார் கையைக் கட்டியபடி மூலையில் நின்றார். தலைவர் பையனின் முகத்தை 2, 3 முறை உற்றுப்பார்த்தார். டேய்... கிருஷ்ணா. நம்ம சௌரி ஏதோ செல்றான். பேப்பர வாங்கி வச்சுக்க.. ஆகட்டும் பார்க்கலாம்...! என்றபடி எழுந்து கோட்டைக்குப் புறப்பட்டு விட்டார்.

நாங்கள் கிளம்பி வந்து விட்டோம். மறு நாள் காலையில் அந்தப் பையனின் வீட்டுக்கே ஆள் வந்தது. அன்றே ஸ்டான்லி மருத்துவக் கல்லூரிக்குப் பையனை வரச்சென்னார்கள் ஏற்கனவே நேர் முகத்தேர்விற்கு முறைப்படி அழைக்கப்பட்டிருந்த பையன்களோடு, இவனும் உட்கார வைக்கப் பட்டான். மருத்துவ கல்லூரி அதிகாரிகள், இந்த மார்க் உள்ள பையன் எப்படி இங்கே வந்திருக்கிறான்...? இவனுக்கு இன்டர்வியூ கார்டே இல்லையே...? என்றனர்.

நண்பகளில் அனைவரும் அதிசியக்கும்படி, மருத்துவக்கல்லூரி டீனே (Dean) அந்தப் பையனை அழைத்து நேர்முகத் தேர்வு நடத்தி, இடமும் கொடுத்துவிட்டார். பிறகுதான் முதலமைச்சரின் பாதுகாப்பு அதிகாரி திரு.கிருஷ்ணன் என்னிடம் நடந்ததைச் சென்னார்.

முதலமைச்சரே டீனிடம் பேசினாராம். அப்பனும் வண்ணான்.அண்ணனும் வண்ணான். இந்தப் பையன் ஒருத்தனாவது ஏதோ படிச்சிட்டு வந்துட்டான். இவன் ஒருத்தனையாவது ஊரு, ரேடியோ கிராஃப்ர் னு கூப்பிடட்டும். அப்பன் தொழிலையே மகனும் செய்யணும்கிறது என்ன தலையெழுத்தா...? எப்படியாவது போட்டுக்கொடுங்க...! என்றாராம் தலைவர்.

இருபது சீட்டுதானுங்களே மொத்தம் இருக்கு...? என்று கேட்டிருக்கிறார் டீன்.

அட....ஒண்ணு, ரெண்டு... சீட் எக்ஸ்டென்ட் பண்ணிக்கிறோம்...! இருபதுங்கிறது கான்ஸ்டி டியூஷனா என்ன ...? என்று முடித்து விட்டாராம் தலைவர்.

தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப் பட்டவர்கள், இழிசாதியினர் என்று தலைவரிடம் சொல்லி விட்டால் போதும். அவர்களுக்காக ஓங்கிக் குரல் கொடுக்காமல் ஓய மாட்டார் உத்தமத் தலைவர்.

சொன்னவர் : டாக்டர் திரு. சௌரிராஜன்
(பெருந்தலைவரின் மருத்துவர்)

தோழர்களே! நீங்கள் நன்கு சிந்திக்க வேண்டும். கல்வித்துறையில் 100 ஆண்டுகளாக ஏற்படாத நன்மை, காமராசரின் 8 ஆண்டுகால ஆட்சியில் ஏற்பட்டு உள்ளது. உத்தியோகத்துறையிலும் அதுபோல 100 ஆண்டு காலம் ஏற்படாத நன்மை, 8 ஆன்டுகளில் ஏற்பட்டுள்ளது. இதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. இதைவிட இந்த மானங்கெட்ட தற்குறி சமுதாயத்திற்கு வேறென்ன வேண்டும்? காமராசரின் 5 ஆண்டு ஆட்சியின் முடிவில் கக்கூஸ்காரன் மகன் சப்-இன்ஸ்பெக்டராக, மாஜிஸ்டிரேட்டாக ஆகப் போகிறான். எல்லா வகுப்பாருக்கும் கல்வி, உத்தியோகம் அளித்து, சாதியை ஒழிப்பது என்று கங்கனம் கட்டிக்கொண்டு பாடு படுகின்றார் காமராசர்.

கலகக்காரத் தோழர் பெரியார்,
விடுதலை, 22.08.1962

நன்றிக்குறிய நூல்கள்:
1. ஆகட்டும் பார்க்கலாம்
2. காரியக் காமராசர் குறித்து காரணப் பெரியார்



*மயிரை மட்டும் கடவுளுக்குக் காணிக்கை தரும் பக்தர்கள்*
*கையையோ காலையோ காணிக்கையாகத் தருவதில்லையே ஏன்?*




# பாலியல் கல்வி ஓர் அறிமுகம்

ஒரு வயது வந்த ஆணும் - பெண்ணும் பாலியல் உறவு கொள்வது இயற்கையான ஒன்றாகும். உடல் ரீதியாகத் தங்களது ஆசைகளை மனப்பூர்வமாகப் பூர்த்திசெய்வதற்கு இவ்வுறவு அவசியமாகும். எனவே இவ்வுறவைப் பற்றி புரிந்து கொள்ளுவது தெரிந்து கொள்ளுவது அனைவருக்கும் அவசியமான ஒன்றாகும்.

உண்மையில் பாலியல் (sex) பற்றித் தெரிந்துகொள்ளவேண்டிய தகவல்கள் ஏராளமாக உள்ளன. ஆனால் திருமணமான ஆண்கள் - பெண்கள் உள்ளிட்ட பலருக்கு இதுகுறித்த பல உண்மையான தகவல்கள் தெரிவதில்லை தெரிந்து கொள்வதற்கான வாய்ப்பும் இங்கு இல்லை.

பெரும்பாலான ஆண்களும், பெண்களும், தங்கள் உடலில் உள்ள அந்தரங்க உறுப்புகளைப்பற்றிக் கூட சரிவர தெரிந்து கொள்ளாமல் இருக்கும் நிலை இச்சமூகத்தில் உள்ளது. இந்நிலைக்கெல்லாம் காரணம் ‘பாலியல்’ பற்றித் தெரிந்து கொள்வதே ‘பாவம்’, ‘அநாகரீகம்’ என்ற மத உணர்வே காரணமாகும்.

குறிப்பாக, பாலியல் பிரச்சினைகளில் சீரழிந்து, குடும்பப் பிரச்சினைகளில் குழப்பத்துடன் காலம் கழிப்பது, கொலை, தற்கொலை என்று வாழ்வின் விரக்தி நிலைக்குச் செல்வது போன்றவை, பெரும்பாலும் பார்ப்பனரல்லாத மக்களிடையே உள்ள நிலை ஆகும்.



இவ்விசயத்தில் (பாலியல் பிரச்சனைகளில்) பார்ப்பனர்கள் தங்கள் ஆற்றலை விரயப்படுத்துவதில்லை. காமக்களியாட்டங்கள் நிறைந்த மதக்குப்பைகளை உருவாக்கி, அதனைப் பரப்பிவரும் இவ்வாதிக்கக்கூட்டம், பாலியல்பிரச்சினைகளைப் பெரிதும் பொருட்படுத்துவதில்லை. ஆனால் பார்ப்பனரல்லாத மக்கள் இவ்விசயங்களில் உணர்ச்சிவசப்படுவதோடு அறிவியல் ரீதியான நடைமுறைகளைப் பின்பற்றாமலும் வாழ்கின்றனர்.

எனவே, மருத்துவத்தில் குறிப்பாக பாலியல் துறையில் சிறந்த மருத்துவர்கள், மனநல மருத்துவர்கள், சமூக அறிஞர்கள், பேராசிரியர்கள் ஆகியோர் இணைந்த குழு ஒன்று பாலியல் தொடர்பான அய்யங்களைக் கேள்வி - பதில் வடிவத்தில் திட்டமிட்டுத் தயாரித்தனர். 1990 ல் திராவிடர் மனித உரிமை அமைப்பு என்ற அமைப்பு இதைச் சிறுநூலாகவே அச்சிட்டு ஆயிரக்கணக்கில் விற்பனை செய்தது.

2014 மே மாதத்தில் கொடைக்கானலில் தமிழ்நாடு அறிவியல் மன்றம் சார்பில் நடைபெற்ற குழந்தைகள் பழகுமுகாமில் நடத்தப்பட்ட இரண்டு மணிநேர பாலியல் அறிமுக வகுப்பில் பங்கேற்ற மாணவர்கள் எழுப்பிய கேள்விகள் அனைத்தும் 25 வருடங்களுக்கு முன்பாக திராவிடர் மனித உரிமை அமைப்பு சேகரித்து பதிலளித்த அதே கேள்விகளாகவே இருந்தன.

எனவே, இந்தக்கேள்வி பதில்களின் முக்கியத்துவம் கருதி அவற்றைத் தொடராக வெளியிடுகிறோம். இந்தத்தொடரில் உள்ள பதில்களில் எந்த ஒன்றயும் கடுமையாக விமர்சிக்க அனைவருக்கும் உரிமை உண்டு. விமர்சனங்களையும் - சந்தேகங்களையும் ஆவலுடன் எதிர் நோக்குகிறோம்.

**1. பாலியல் கல்வியின் அவசியமென்ன?**

மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவு இன்றியமையாதது. உணவு தேவை எனில் மனிதன் கேட்டுப் பெருகிறான். அதன் சுவையைப் பிறரிடம் சொல்கிறான். அதைபற்றிப் படித்து அறிந்து கொள்கிறான். எவ்விதத் தயக்கத்திற்கும் இடம் கொடுக்கமால் பிறிடம் கலந்து பேசுகிறான். மேலும் மேலும் அதைப் பற்றித் தெரிந்து கொள்கிறான். அதன் சுவையை அனுபவிக்கிறான். அதுபோல பாலியல் தேவை மனித வாழ்விற்கு முக்கியத்தேவைகளில் ஒன்றாக இருப்பதுடன் இன்றியமையாததாகவும் உள்ளது. இயற்கையான இன்பம் அடைவதற்கும் தன் இனப்பெருக்கத்திற்கும் தன் துணையுடன் இணக்கம் ஏற்படுத்துவதற்கும் பாலியல் பற்றிய புரிதல் மனிதருக்கு அவசியமாகிறது. ஆனால் மனிதன் அதுபற்றிப் பேசவும் வெளிப்படையாக விவாதிக்கவும் தயங்குகிறான். ஏனெனில் அது மாதிரியான மனோபாவத்தை நமது சமூகக் கலாச்சார அமைப்பு மனித சமூகத்தின் மீது திணித்துவிட்டது.

இதனால் பாலியல் குறித்த தெளிவான அறிவு பெற வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. இதனால் மனிதவாழ்வில் நிம்மதியின்மையும், தேவையற்ற பல தொல்லைகளும் ஏற்படுகின்றன. சந்தேகம், பாலியல் பற்றிய தெளிவின்மை, தன்னைப் பற்றியான தவறான அபிப்பிராயம் போன்ற காரணங்களினால் மனிதன் முழுமையான இன்பம் அடைய முடியாத நிலை ஏற்படுகிறது. நடைமுறையில் நாம் செய்தித்தாள்களில் காணும் வெட்டு, குத்து, அடிதடி, சண்டை, கொலை, தற்கொலை போன்றவை பெரும்பாலும் பாலியலை மையமாகக் கொண்டே நிகழ்கின்றன. இதனால் மனித ஆற்றல் பொருளாற்றல் (மொத்தத்தில் சமூக ஆற்றல்) வீணாகிறது. இதற்கு முக்கியக் காரணம் பாலியல் பற்றிய தெளிவின்மையே ஆகும்.

அடிப்படையில் பாலியல் தெளிவு இல்லாததால் பல குடும்பங்களில் சிக்கல்களும் மனம் மற்றும் மண முறிவுகளும் ஏற்படுகின்றன. இன்று எய்ட்ஸ் ( Acquired Immune (or Immuno) Deficiency Syndrome) போன்றவை அதிகமாகப் பரவிவருகிறது. பாலியல் கல்வி இதனைப் பற்றிய அறிவையும், தெளிவையும் தரும். பாலியல் கல்வியால் இது மாதிரியான நோய்கள் வராமல் தடுக்கலாம். அப்படியே வந்தாலும் சரியான அணுகுமுறையைக் கையாள அக்கல்வி துணை புரியும்.

அரசியல், சமூக, பொருளாதார ரீதியில் நடைபெறும் முக்கியச் சமூகப் பிரச்சினைகளுக்கு இந்நாட்டு மக்கள் முக்கியத்துவம் கொடுக்காமல் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பாலியல் தொடர்பான மிகச்சாதாரான விசயங்களுக்குக் கூட அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். இதன் காரணமாகவும் பல சமூகப் பிரச்சனைகள் ஏற்படுகின்றண. மேற்கூறியுள்ள கருத்துக்களை மனதிலெடுத்துக் கொண்டு ஆராய்கையில் பாலியல் பற்றித் தெரிந்து கொள்வது அவசியம் என்பதும் தெரிய வருகிறது.

**2. பாலியல் பற்றி அறியாமையால் ஏற்படும் விளைவுகள் யாவை?**

பெரும்பாலோர் பாலியல் தேவையைத் தவறு, அது குற்றம் என்று நினைக்கின்றனர். எனவே இதனை அறிய அனுபவிக்க ஏதேனும் ஒரு



நோய்கள் கடவுள் கொடுக்கும் தண்டனையே என்று கூறும் பக்தர்கள்
நோய் வந்தவுடன்டாக்டரிடம் ஓடுவது ஏன்?

இரகசியமான, ஆரோக்கியமற்ற வழியை இளைஞர்கள் நாடுகிறார்கள். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி வியாபார நோக்கமுள்ள சினிமாக்களும் தினசரிகளும், வார,மாத இதழ்களும் தவறான வழி காட்டுதலை தருகின்றன. மேலும் இவைகள் இத்தகைய மனோநிலையைப் பணமாக்கிக் கொள்கின்றன. இது ஆண், பெண் இருபாலர்களையும் தவறான பாதைக்குக் கொண்டு செல்லவும், மோசமான விளைவுகளுக்கு உள்ளாக்கவும் காரணமாக இருக்கின்றன. இதில் பெரிதும் பாதிக்கப்படுவது பெண்களே. சமூகத்தில் அதிகமாக நிகழ்ந்து வரும் தகராறுகளுக்கும்,கொலைகளுக்கும், தற்கொலைகளுக்கும் பல குடும்பங்களில் உறவுகள் விரிசல் அடைவதற்கும் பாலியல் பற்றிய தெளிவின்மையே முக்கியக் காரணமாகும்.

நம் சமூகத்தில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை பெரும்பாலான நேரங்களில் இரட்டை அர்த்தத்தில் பேசுகிறார்கள். அத்துடன் தவறான பாலியல் எண்ணத்தைத் தூண்டக்கூடிய கதைகளைப் படிக்கின்றனர். கிளர்ச்சியைத் தூண்டும் திரைப்படங்களையும், நாடகங் களையும் பார்க்கின்றனர். அத்தோடு சாலை யோரங்களில் நின்று பெண்களைத் தவறான நோக்கத்தில் பார்ப்பதும், கேலி பேசுவது போன்ற பல செயல்களில் இளைஞர்கள் நேரத்தை வீணாக்க நேரிடுகிறது. இது பாலியல் பற்றிய கல்வி புகட்டாமல் இதனை இரகசியம் என மறைத்து வருவதால் ஏற்படும் விளைவேயாகும்.

**3. பாலியல் கல்வி மூலம் கிடைக்கும் நன்மைகள் யாவை?**

பாலியல் கல்வி மூலம் பாலுணர்வு மற்றும் பாலியல் இன்பம் இயல்பானது என அறிய முடியும். இது முறையானது,இயற்கையானது, நியாயமானது என உணர முடியும். அக்கல்வி மனிதன் அனைவருக்கும் தேவையான ஒன்று என்பதை அறியவும், பாலியல் பற்றிய தெளிவு ஏற்படவும் பயன்படும். இதன் மூலம் பாலியல் பற்றிய தவறான எண்ணங்கள் விலகும். இது குறித்து அனைவரும் உளறித் திரியாமலும் வீண் பொழுது போக்காமலும் பயனுள்ள பணிகளில் ஈடுபட முடியும். இதன் மூலம் சமூகத்தையும் தன்னையும் உயர்த்திக்கொள்ள முடியும். பாலியல் தேவைகளை நேர்மையான ஆரோக்கியமான முறையில் நெறிப்படுத்திக்கொள்ளவும், பாலியல் நோய்கள் வராமல் காத்துக் கொள்ளவும், பாலியல் குறைகள் இருப்பதாகத் தெரிந்தவுடன் (துவக்க நிலையில்) மருத்துவரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ள முயல்வதும் பாலியல் கல்வியின் பயன்களாகும்.

**4. பாலுணர்வு என்பது ஒரு இயற்கையான உணர்வு தானே? அதை எந்த உயிரும் தன்னிச்சையாக உடலுறவு மூலம் வெளிப்படுத்தத்தானே செய்கிறது? அதற்கு யாரும் சொல்லிக்கொடுக்கவேண்டிய அவசியம் இல்லையே ? மனிதரை மட்டும் ஏன் அதனை தெரிந்து கொள்ள செய்ய வேண்டும்?**

மனிதன் மற்ற உயிரினங்களை விட அறிவில் உயர்ந்தவன். நாகரீகமான உயர்நெறியுடன் கூடிய வாழ்க்கையை அமைத்துக்கொண்டவன். அதாவது சமூகக் கூட்டுவாழ்க்கையை ஏற்று நடப்பவன்.

மற்ற உயிரினங்கள் இனப்பெருக்கத் திற்காகக் குறிப்பிட்ட பருவகாலங்களில் சிலமுறை கூடுவதோடு பாலூறவை முடித்துக்கொள்கிறது. எனவே அவைகளுக்கு பாலியல் பிரச்சனைகள் மிக மிகக்குறைவே ஆகும். ஆனால் மனிதனின் தேவை அப்படிப்பட்டதல்ல. எல்லாக் காலங்களிலும் அவனுடைய பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டிய அவசியம் உள்ளதால் அவற்றில் ஏற்படும் பிரச்சனைகள், தீர்வுகள் பற்றிய புரிதல் அவசியமாகிறது.

மேலும் பாலுறவில் ஈடுபடும் ஆண், சக பெண் துணையை சந்தேகிப்பதும், ஆளுமைப் படுத்துவதும் மனித சமூகத்தில் உள்ள சூழல்களாகும். இத்தகைய குணாம்சம் நம் சமூகத்தில் இருப்பதால் பல்வேறு பிரச்சனைகள் எழுகின்றன. இதில் பெரும்பாலும் பாதிக்கப்படுபவர்கள் பெண்களாகவே உள்ளனர். அப்பிரச்சனைகளில் பெரும்பாலான வற்றை தீர்க்க பாலியல் கல்வியை கற்றுக் கொள்வது அவசியமாகும். மேலும் தவறான பாலியல் வழிகாட்டுதல்களைத் தரக்கூடிய மதம், சினிமா, பத்திரிக்கை போன்ற சாதனங்கள் விலங்குகளுக்கு கிடையாது.

**5. இருபாலர் கல்வி எனப்படும் கோ-எஜூக்கேசன் (Co-Education) கல்வி முறை நல்ல முறை தானா?**

ஆண், பெண் இருவரும் சேர்ந்து படிப்பது நல்லது. சிறிய வயதில் பெரும்பாலும் 1முதல் 5 வரை ஆணும் பெண்ணும் சேர்ந்து ஒன்றாக படிக்கின்றனர். இந்தக் காலம் சிறிய வயது காலமாதலால் ஆண், பெண் பருவ கால உணர்வுகள் அவர்கள் மனதில் ஏற்படுவதில்லை. அதன் பின்னர் 6ஆம் வகுப்பு முதல் பள்ளி இறுதிவகுப்பு வரை பெரும்பாலும் ஆணும், பெண்ணும் தனித்தனியாகப் பிரிந்து படிக்கின்றனர். இடைப்பட்ட இந்த நிலையில்தான் ஆண், பெண் பருவ மாற்றங்கள் உடலில் ஏற்படுகின்றன.



தமிழ் புரியாத கடவுளுக்குத் தமிழ் நாட்டில் என்ன வேலை?

இருபாலரிடையேயும் மீசை மார்பு என உடல்ரீதியாகவும், மற்றும் உணர்வு ரீதியாகவும் பல மாற்றங்கள் வெளிப்படுகின்றன. அச் சமயத்தில் இருபாலரும் சேர்ந்து படிக்கும் வாய்ப்பு பெரும்பாலும் இல்லை. இதனால் இருவருக்கும் இடையே கருத்துப் பரிமாற்றம் இல்லாமல் போகிறது. உணர்வுகள் மேலோங்கி வளர்வது இந்த இளம் (Teen Age) பருவத்தில்தான். எனவே பாலியல் பற்றிய புரிதல் இல்லாத பள்ளிப்பருவத்தில் இருபாலரையும் பிரித்து வைத்துவிட்டு பாலுணர்வு மேலோங்கி வரும் கல்லூரிப்பருவத்தில் அவர்களைச் சேர்த்து படிக்க வைத்தாலும், பிரித்துப் படிக்க வைத்தாலும் அவர்கள் உணர்வுகள் மேலோங்கியிருக்கும். இத்தன்மையானது பள்ளிப்பருவத்தில் அவர்களைப் பிரித்து வைப்பதால் ஏற்படுவதே ஆகும்.

இதன் விளைவாக இருவருக்கும் புரிதல் இல்லாமல் போகும். இதனால் பாலியல் வக்கிர வெளிப்பாடுகள் இருபாலரிடமும் வெளிப்படு கின்றன. மேலும் இருபாலருக்கும் இங்கு பாலியல் கல்வி கற்பிக்கப்படாததும் குறைபாடாக அமைகிறது. எனவே தொடக்கக்கல்வி முதல் கல்லூரிப் படிப்பு வரை அனைத்து வகுப்புகளிலும் இருபாலர் கல்வி நடைமுறையில் இருப்பது அவசியம் ஆகும். இதனால் இருபாலரும் ஒருவரை ஒருவர் வேறுபட்ட கண்ணோட்டத்துடன் பார்ப்பது நீங்கும். சகஜமான பழக்க வழக்கங்கள் உண்டாகும். இதனால் ஏற்படும் கொலை - தற்கொலை போன்ற நிகழ்வுகள் தடுக்கப்படும் வாய்ப்புகள் உருவாகும். படிக்கும் காலத்திலேயே ஆண், பெண் இருவருக்கிடையே இவ்விதமான பாலியல் அறிவைப் புகட்டாமல் திருமண வயதில் இணைய வைக்கின்றனர். இதனால் அவர்களுக்கு பாலியல் பற்றிய வீணான அச்சம் உண்டாகிறது. இது சந்தேகம், குழப்பம் என துவங்கி திருமண முறிவு, மனமுறிவு என கொண்டு செல்கிறது. இருபாலர் கல்வி முறை நடைமுறைப்படுத்தினால் இவை பெரும்பாலும் தவிர்க்கப்படும். இருபாலர் கல்வியோடு உயர் பள்ளி வகுப்பு துவக்கத்தில் இருந்து பாலியல் கல்வியும் புகட்டுவதே மிக சிறந்ததாகும்.

6. பாலியல் கல்விக்குச் செயல்முறை விளக்கம் தேவையா?

தேவைதான். வரைபடம், சிலைடு, விளக்கப்படம், மாதிரிகள், கணிணி, சினிமா, தொலைக்காட்சி, இவற்றின் மூலம் அறிவியல், மருத்துவம் உள்ளிட்ட மற்ற பாடங்கள் விளக்கப்படுவது நடைமுறையில் உள்ளது. அதே நடைமுறையைப் பின்பற்றி பாலியல் கல்வியையும் விளக்கலாம். இது மிகவும் தேவையானது ஆகும்.

7. பலருடன் உடல் உறவு கொள்பவருக்கு பாலியல் பற்றி அனைத்தும் தெரிந்திருக்குமா?

பாலியல் பற்றிய அறிவு என்பது பாலியல் பற்றி வெளிவந்துள்ள அறிவியல் ஆய்வு செய்திகளை அறிவதன் மூலம் தெரிந்து கொள்வதாகும். பாலியல் பற்றியும், பாலியல் கல்வி பற்றியும் நிறைய ஆய்வுகள் வெளிவந்துள்ளன. இத்தகைய ஆய்வுகளைப் படித்து சந்தேகங்களை மருத்துவரிடம் கேட்டறிந்தால் மட்டுமே பாலியலில் புரிதல் ஏற்படும். தம்மைப்பற்றிப் பெரிதாக வெளிக்காட்ட வேண்டும் என்ற ஆசையில் பல தவறான திரித்த (பொய்) தகவல்களை இவர்கள் பரப்புவார்கள். பாலியல் பற்றிய தெளிவான அறிவு இவர்களுக்கு இருக்க வாய்ப்பு இல்லை. எனவே பாலியல் கல்வி மூலமே உண்மைகளை அறிய முடியும்.

– தொடரும்

## சிந்திக்க...

உலகைப் படைத்தது கடவுள் எனில் கடவுளைப் படைத்தது யார்?

கடவுளர் படைஇருக்க, எல்லையில் காவற்படையினர் ஏன்?

எல்லாம் வல்ல கடவுளின் கோயிலுக்குப் பூட்டும், காவலும் ஏன்?

எல்லாம் அவன் செயல் என்றால் புயலும், வெள்ளமும் எவன் செயல்?

பத்து அவதாரங்கள் எடுத்த கடவுள் விலைவாசியை குறைக்க ஒரு அவதாரம் கூட எடுக்காதது ஏன்?

அவனன்றி ஓரணுவும் அசையாதுஎனில், கோவில் சிலை வெளிநாடு செல்வது எவன் செயல்?

அன்பே உருவான கடவுளுக்கு கொலைக்கருவிகள் எதற்கு?

குழந்தைகளைப் படைப்பது கடவுள் சக்தி என்றால், குடும்பக் கட்டுப்பாடு செய்தபின் அவனால் படைக்க முடியுமா?

அணுவில் இருக்கும் ஆண்டவன் அணுகுண்டில் இல்லையா?

ஆண்டவன் உண்பதாக உணவு படைக்கின்றாயே! அது மலங்கழிக்காதா?

விதிப்படி எல்லாம் நடக்கும் போது வீணாக ஆண்டவன் ஏன்?

20ஆம் பக்க தொடர்ச்சி

எதிரிகளான பார்ப்பன - சிங்களர்களுடைய ஆயுதங்களான - இந்துத்துவ அமைப்புகளைத் தமிழர்களின் விடுதலைக்கு ஆதரவான போராட்டங்களில் பங்கேற்க வைப்பதும் - நமது முக்கிய அமைப்புகளே அவர்களுக்கு சிறப்பு செய்வதும், பாராட்டுவதும் - அவர்களது பண்பாடுகளான யாகம் நடத்துவது, கோவில் கட்டுவது, இந்துக்கோவில்களில் வழிபாடு நடத்துவது போன்றவற்றை ஏற்று நடைமுறைப் படுத்துவதும் மிகவும் ஆபத்தான போக்கு களாகும். எதிரி நம்மைச் செரிக்கத்தொடங்கி விட்டான் என்பதற்கு அடையாளமுமாகும்.

### பகுத்தறிவற்ற அரசியல் விடுதலை

தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்காக மண்சோறு சாப்பிடுதல், மொட்டை அடித்தல், காவடி எடுத்தல், தீச்சட்டி எடுத்தல் போன்ற மடச்சடங்குகள் நடந்தபோது பகுத்தறிவாளர் களாகிய நாம் கண்டித்தோம். ஆனால் ஈழவிடுதலை என்ற தளத்தில் நடத்தப்படும் யாகங்களும் வழிபாடுகளும்-பிரபாகரன் பிறந்தநாள் என்ற பெயரில் நடைபெறும் ஆலய வழிபாடுகளும் அ.தி.மு.க அரசியலைவிட பலமடங்கு ஆபத்தானவை.

ஈழவிடுதலை என்ற பெயரில் நடக்கும் இதுபோன்ற இந்துமதப் போக்குகளை - பார்ப்பனச் சார்புப் போக்குகளை 'மதச்சார்பற்ற சோசலிசத் தமிழீழம்' அறிவித்த விடுதலைப்புலிகள் அமைப்பு இன்றுவரை கண்டிக்கவில்லை. ஈழத்திற்காக உயிரைக் கொடுத்தும் உழைத்த பெரியார் தொண்டர் களான நாமும் கண்டிக்கவில்லை.

ஈழவிடுதலைப் போரின் அடுத்தகட்டப் பயணம் தடம் மாறுவதையும், எதிரிகளிடம் சிக்கும் பாதையில் பயணிப்பதையும், கண்டிப்பதும்-அதைத் தடுப்பதும் அந்த நாட்டு விடுதலைக்காக உண்மையாகப் போராடுபவர்களிடம் இயல்பாக இருக்க வேண்டிய பண்பு.

இந்தியப் பார்ப்பனர்கள், தங்களின் ஆதிக்கத்துக்கு எதிராக வந்த புத்த மதம் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான மதங்களையும் வாழ்வியல் முறைகளையும் அரவணைத்து, ஊடுருவி அழித்தார்கள். 'இந்துவாகச்சாக மாட்டேன்' என்று சூளுரைத்து, மனுசாஸ்திரங்களை எரித்த தோழர் அம்பேத்கரையே செரிமானம் செய்யத் தொடங்கியுள்ளனர். இந்து மத அமைப்பு களிடமும், இந்தியப்பார்ப்பனர்களிடமும் எச்சரிக்கையுடன் கூடிய அணுகு முறைகளை வகுத்துக்கொண்டு செயல்பட வேண்டிய முக்கியத் தருணம் இது.

ஈழவிடுதலை ஆதரவு என்ற வலையில் தமிழ்நாட்டிலும், தமிழீழத்திலும் வேத காலத்தை -பார்ப்பனர்களின் பொற்காலமான குப்தர் காலத்தை மீண்டும் அரங்கேற்றத் துடிக்கும் சக்திகளை அடையாளம் காண்போம். இனியாவது, ஈழவிடுதலை ஆதரவுக் களத்தில் ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் முன்னணி அமைப்பு களை விலக்கி வைப்போம். சிங்கள - பார்ப்பனப் பண்பாட்டுப் படையெடுப்புகளை ஒரே சேர முறியடிப்போம்!

யாரையும் குற்றம் சொல்லவோ, யாருக்கும் அறிவுரை சொல்லவோ இதை எழுதவில்லை. இந்தக் கட்டுரை கூறும் திசையில் ஒரு விவாதம் தொடங்க வேண்டும். இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ள தகவல்கள், யானையைத் தடவிப் பார்த்து அடையாளம் சொன்ன பார்வையற்றவரின் அளவுக்குக் கூட இருக்கலாம். எனவே, ஈழவிடுதலைப் போரின் அனைத்து அசைவுகளையும் நன்கு அறிந்தவர்கள் யாராவது பெரியாரியல் பார்வையில் ஒரு ஆய்வைத் தொடங்கவேண்டும் என்ற நோக்கமே தவிர வேறொன்றுமில்லை.

"திராவிட இயக்கமும் ஓர் அரசியல் கட்சியாக வேலை செய்திருந்து, மந்திரி பதவிகளில் அமர்ந்திருந்தால் கூட இன்றைய நிலையில் மக்களுக்கு ஒரு நன்மையும் பயக்க முடியாது. அஸ்திவாரமில்லாத கட்டிடம் எப்படி சரிந்து விழுந்து விடுமோ அதே போன்று மக்கள் சமுதாயத்திலே ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வேரூன்றி வளர்ந்து வந்துள்ள மடமைகளைப் பகுத்தறிவற்ற தன்மையை - மூடப்பழக்க வழக்கங்களை - வைதீக மனப்பான்மையை - ஜாதி மதவெறியை அறவே ஒழித்து அனைவரையும் அறிவுள்ளவர்களாக்காத வரையில் எப்பேர்பட்ட ஆட்சியாயிருப்பினும் அது நீடித்து இருக்க முடியாது; நாட்டிலும் அமைதி நிலவ முடியாது. ஏன்?

அமைதியில்லாவிடத்தில் அறிவு நிலைத்திருக்க முடியாதல்லவா? இதற்கு ஆதாரமாக நாம் கண்கூடாகக் கண்டு விட் டோமே. சுயராஜ்யம் வந்த பின்னர்தானே, சுயராஜ்யம் வாங்கித் தந்தவர் என்று எந்த கூட்டம் புகழ் பாடிற்றோ, அதே கூட்டத்தைச் சேர்ந்த ஒருவன் காந்தியாரைச் சுட்டுக் கொன்று விட்டான். அரசியல் அதிகாரம் கைக்கு வந்து அதற்கு அடிப்படையாக வேண்டிய அறிவுடைமை இல்லாததின் பலனல்லவா இது? எனவே தான் நமக்கு உண்மையான சுயராஜ்யம் வர இன்னும் சில ஆண்டுகள் காலதாமதம் ஆனாலும், மக்கள் பகுத்தறிவு பெற வேண்டுவதே முதலாவதான முக்கிய கடமை என்பதைத் திராவிடர் கழகம் வலியுறுத்திக் கூறி பணியாற்றி வருகிறது."

-தோழர் பெரியார், விடுதலை - 07.04.1949

முனைவர்.பூ.மணிமாறன்

# கல்வி
## ஒடுக்கப்பட்டோருக்கான விடுதலை



"எழுதப்படிக்க மட்டும் கற்றுக் கொடுப்பது கல்வியல்ல. வெறும் மனப்பாடத் திறமையில் தகவல் தொகுப்பாக குழந்தைகளை மாற்றுவது கல்வியின் பணியல்ல. மாறாக ஒட்டு மொத்த சமூகத்தின் அனைத்து அம்சங்களையும் விருப்பு வெறுப்பின்றி, விசாரணை செய்வதும், சமூக அநீதியைக் களைவதும், ஒரு சிலர் மட்டும் அனுபவிக்கும் முறையற்ற செல்வப்பகிர்வை உலகில் உள்ள அனைவருக்கும் பயனுடையதாக மாற்றுவதும் கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டும்." - பாவ்லோ பிரைரயர்;

நம் சமூகத்தில் உள்ள அனைத்து வேறுபாடுகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் தன்னகத்தே கொண்டதாக நமது கல்வி அமைப்பு உள்ளதை நாம் அனைவரும் அறிவோம். சமூகத்தில் காணப்படும் ஜாதீய பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைப் பிரதிபலிப்பதாகவும் இந்த அமைப்பு காணப்படுகிறது. இத்தகைய குறைகளைக் கண்டு வெகுண்டு எழ வேண்டிய ஆசிரியப் பெருமக்களும் கல்வியாளர்களும் அமைதி காக்கின்றனர்.


காரணம் அவர்களிடம் போதிய விமர்சனக் கண்ணோட்டம் இல்லை. அதை வளர்த்தெடுப் பதற்கான அமைப்புகளும் இல்லை. இத்தகைய விமர்சனக் கண்ணோட்டம் கொண்ட கல்வி முறைமையைச் சிந்தித்தவர் பவுலோ பிரைரயர். இந்தச் சமூகத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள், அதனை எவ்வகையில் எல்லாம் சீர் செய்யலாம் என பல வழிகளில் சிந்தித்த பெரியார், அம்பேத்கரின் எழுத்துக்களுக்கு இணையாக நாம் பாவ்லோ பிரைரயரை வாசிக்க வேண்டும்.

மூன்றாம் உலக நாடுகளில் ஒன்றான பிரேசில் என்ற நாட்டில் இருந்து கல்வியின் மூலமான சமூக விடுதலை, இன்றைய கல்வி அமைப்புகளில் இருந்து விடுதலை என்ற குரல் ஓங்கி ஒலித்தது. இந்தக் குரல் பாவ்லோ பிரைரயரின் குரல். இந்தக் குரல் இலத்தீன் அமெரிக்க நாட்டைத் தாண்டி உலக நாடுகளிலும் எதிரொலிக்க தொடங்கியது. இந்தியாவில் இந்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட வயது வந்தோர் கல்விதிட்டத்திலும் பிரைரயரின் கல்வித்தாக்கம் உண்டு.


பிரைரயரின் கல்வி முறைகள் வயது வந்தோர் கல்வி, ஒடுக்கப்பட்டோர் விடுதலைக்கான கல்விமுறை *(Pedogogy of the Oppressed)*, விடுதலைக்கான கல்வி (Education for Liberation), விடுதலைக்கான கலாச்சாரச் செயல்பாடு(Culture action of Freedom) என பகுத்துக் கூறுகின்றனர். இந்தப் பெயர்களிலேயே அவரது நூல்களும் வெளிவந்துள்ளன. இந்த நூல்களில் முகாமையாக ஒடுக்குமுறை, ஒடுக்கப்படுவோர், சமூகப் பொருளாதார எதார்த்தம், மௌனக் கலாச்சாரம் (இக்கூற்று இங்கு பல முக்கிய ஜாதீயப் பொருளாதார ஒடுக்குமுறைகளின் போது கள்ளமௌனமாகப் பலரால் கடைப்பிடிக்கப் படுகிறது),விழிப்புணர்வு வழிச் செயல்பாடு, செயற்பாட்டு மறு சிந்தனை, செயற்பாடு போன்ற கருத்தக்கங்கள் பற்றி விரிவாக அலசுகிறார்.

பாவ்லோ பிரைரயர் 1921 ல் பிறந்தார். இவர் தம் பெற்றோர்கள் வாயிலாகவே 'உரையாடல்' என்ற கருத்தாக்கத்தைக் கற்றுக்கொண்டதாகக் கூறுகிறார்.ஏனெனில் அவரது குடும்பத்தில் அவ்வளவு சுதந்திரமான உரையாடல் மேற்க்கொள்ளப்பட்டிருக்கிறது.1943 ல் பாவ்லோ பிரைரயர் சட்டம் பயின்றார். 1946ல் அவர் சமூகப்பணி-கல்வித்துறையின் இயக்குநராக நியமிக்கப்பட்டார். 1961 ல் கலாச்சாரத்துறையின் இயக்குநரானார். 1964 ல் அங்கு நடந்த இராணுவ ஆட்சியின் போது 70 நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டார். அதன் பின் சிறிது நாட்கள் பொலிவியாவில் இருந்து விட்டு மீண்டும் சிலி திரும்பினார்.

*1967 ல் விடுதலையின் ஆயுதமான கல்வி (Education as the Practice of Freedom) என்கிற அவரது முதல்நூல் வெளியானது. 1968 ல் அவரது ஒடுக்கப் பட்டவர்களின் விடுதலைக்கான கல்வி (Pedagogy of the Oppressed) நூல் வெளியானது.*



பவுலோ பிரைரயர்



போர்த்துகீசிய மொழியில் வெளியான இந்தநூல் 1970 ல் தான் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டது. இதன் ஆங்கிலப் பிரதி உருவாகி பல வருடங்கள் இந்தப் புத்தகத்தின் மீது எந்த கவனமும் உருவாகவில்லை. ஐ.நாவின் கவனத்திற்கு இந்தநூல் சென்றபின்னர் தான் அது உலகம் முழுவதும் எழுத்தறிவு இயக்கங்களால் கையில் எடுக்கப்பட்டது. 1990 களில் தான் மெல்ல உலக மொழிகள் பலவற்றில் இந்த நூல் மொழியாக்கம் செய்யப்பட்டது. இது தமிழுக்கும் வந்தது. இந்தியா முழுவதும் நடைபெற்ற அறிவொளி இயக்கத்தின் முன்னோடிகளில் சிலர் இந்த புத்தகத்தின் பாதிப்பைப் பெற்றவர்களாக இருந்தனர்.

**பிரையரின் கல்விமுறைகள் :**

விழிப்புணர்வு வழி செயற்பாடு (Concientization) விழிப்புணர்வு வழி செயற்பாடு என்பது வயது வந்தோர்க்கான எழுத்தறிவுக்கல்வி முறை. இம்முறையில் எழுத்தறிவு பெறுதல் மட்டுமே நோக்கமன்று. தான் வாழுகின்ற சமூகத்தின் சூழலைப்புரிந்து கொள்வது, சூழல் தரும் சவால்களைச் சந்திப்பது மேலும் கேள்விக்குள்ளாக்குவது.

வங்கிமுறைக் கல்வியைப் பிரையர் கடுமையாகச் சாடுகிறார். தற்போது நம்மால் பின்பற்றப்படும் வங்கிமுறைக் கல்வி எப்படி உள்ளது.

- **ஆசிரியர் கற்பிக்கிறார். -மாணவர்கள் கற்கின்றனர்.**
- **ஆசிரியருக்கு எல்லாம் தெரியும்.- மாணவர்க்கு எதுவுமே தெரியாது.**
- **ஆசிரியர் சிந்திக்கிறார்.-மாணவர்கள் நினைக்கப்படுகின்றனர்.**
- **ஆசிரியர் பேசுகிறார்.-மாணவர்கள் கேட்கின்றனர்.**
- **ஆசிரியர் மாணவர்களை கட்டுப் படுத்துகின்றார், -மாணவர்கள் கட்டுப்படுகின்றனர்.**
- **ஆசிரியர் தெரிவு செய்கிறார். தெரிவு செய்ததை நடைமுறைப்படுத்துகிறார். மானவர்கள் அதனை ஏற்கின்றனர்.**
- **ஆசிரியர் மட்டுமே செயல்படுகிறார். மாணவர்கள் ஆசிரியரின் செயல்மூலம் செயற்படுவதாக நம்புகிறனர்.**
- **பாடப்பொருளை ஆசிரியர் தெரிவு செய்கிறார்.-மாணவர்கள் அப்படியே தமதாக்கிக் கொள்கின்றனர்.**
- **ஆசிரியர் மனிதர். - மாணவர் பொருள்.**

மேற்கண்ட கல்வி அமைப்பை தமது 'உரையாடல்' வழிக்கல்வி மூலமாக கேள்விக் குள்ளாக்குகிறார் பிரையர்.

பாவ்லோ பிரையர் கல்வி தான் ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலைக்கான ஒரே ஆயுதம் என்கிறார். கல்வி ஒரு தீவிரமான அரசியல் நடவடிக்கை என்கிறார். கல்வியில் நடுநிலைக்கல்வி என்று இல்லை என்பதை அடித்து கூறியவர்களில் பாவ்லோ பிரையரின் குரல் முதன்மையானது. கல்விக்கு இரண்டு பாத்திரங்கள் தான் உள்ளது என்கிறார் பாவ்லோ பிரையர்.

ஒன்று கல்வி இன்றைய சமூகத்தில் நிலவும் நடைமுறைகளைப் பாதுகாப்பதாக, அதற்கு தகுந்தவர்களை உருவாக்குவதாக, இந்த விதிமுறைகளின் படி வாழும் மனிதர்களை தயார்படுத்துவதாக உள்ளது அல்லது கல்வி இந்த சமூகத்தின் விழுமியங்களை கேள்விக்கு உட்படுத்தி, விவாதித்து இந்தச் சமூகத்தை மாற்றும் கருவியாக விளங்கும் என்கிறார்.

ஆசிரியர்கள் இந்தக் கல்வியின் அரசியலைப் புரிந்துகொள்ளவில்லை என்றால் அவர்கள் அரசின், ஆட்சியாளர்களின் சேவகர்களாகச் சுருங்கிப்போவார்கள் என்கிறார். இந்த இடத்தில் நாம் பாவ்லோ பிரையரின் சிந்தனைகளின் படி பார்த்தால், இந்தியாவில் எத்தனைக் கேவலமான கல்விமுறையையும், ஆசிரியர்களையும் கொண்டிருக்கிறோம் என்பதை அவர் அவர் அனுபவத்துடன் அனுமானித்துக் கொள்ளலாம்.

நம் பாடநூல்களில் முட்டிச்சரியும் மாணவனை பற்றி நம் ஆசிரியர்களுக்குக் கவலை இருந்ததே இல்லை. அவர்கள் பாடத்திட்டத்தை முடிக்கும் அவசரத்தில் எல்லோர் தலைமீதும் பாடத்திட்ட ரோட் ரோலரை ஏற்றி நம் கற்றல் அனுபவத்தைச்சட்னியாக அரைத்துவிடுவார்கள். கற்றல் குறைபாடு உடையவர்களின் கதியைப்பற்றி யோசிக்கவே பயமாக உள்ளது. அவர்கள் மெல்லக் கற்பவர்களாக உளவியல் பகுப்பாய்வு செய்கிறது. அவர்கள் மெல்ல கற்பார்கள்

ஆனால் பல நேரங்களில் மிகுந்த ஆற்றல் உடையவர்களாக பெரும் விஞ்ஞானிகளாக, சிந்தனையாளர்களாக உருவெடுத்திருக்கிறார்கள். ஆனால் அப்படி உருவாக எத்தனை பேரை இந்தக் கல்விமுறை அனுமதித்திருக்கிறது என்பதை நாம் யோசிக்க வேண்டும்.

இவர்கள் எல்லாம் நாம் இந்த உலகின் வேகத்திற்கு லாயக்கில்லை என்று Drop Out களாக மாறி சுதந்திரமாகக் கைக்குக் கிடைத்த

*கல்விக்குக் காரணம் சரஸ்வதியா? ஆசிரியரா?*
*பக்தியுள்ளவன் படிக்காமல் பாஸ் ஆவானா?*

வேலையில் நுழைந்து விடுவார்கள். இவர்கள் என்றும் இனி கலெக்டர்களாகவே, அதிகாரியாகவோ முயற்சிக்க போவதில்லை.

பாவ்லோ பிரையர் மிகுந்த நேசத்துடன் விவசாயிகளுக்கு, முதியவர்களுக்கு என இந்த சமூகத்தின் ஒடுக்கப்பட்டவர்களுக்கு பாடம் கற்றுக்கொடுத்து, இந்த உரையாடலில் தானும் கற்றதைப் பதிவு செய்தவாறு இருந்தார். அவ்வாறான ஒப்புதல் வாக்குமூலங்களைத் தமிழில் கல்விச் சிந்தனையாளர் ச.மாடசாமி அவர்களின் எழுத்துகளில் மட்டுமே காணமுடிகிறது. அவரது எழுத்துக்களை வாசிக்கும் போது நமக்கு எங்கோ ஒரு பாறைக்குள் ஓடும் ஒரு ஊற்றின் ஓசையை கேட்பது போலான அந்தரங்க ஸ்பரிசம் ஏற்படுகிறது.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு நட்சத்திரம் இருக்கிறது. காண்பதற்குக் கண்கள் வேண்டும் என்கிறார் ச.மாடசாமி. மாணவர்கள் வெற்றி பெற வகுப்பறைகள் போதாது என்றும், விரிவாக அவர் Deschooling பற்றி பேசுகிறார். அடுத்து சுவரும், சன்னலும், கரும்பலகையும், பெஞ்சுகளும், மணியோசையு மாய்ச் சலித்துப்போன வகுப்பறை அடையாளங்களை நீக்கி, இது கல்விக் கலாச்சார மையம் என்று மாற்றம் பெறவேண்டும் என்கிற அவரது பார்வை எத்தனை தீர்க்கமானது என்பது இந்த கல்விச் சாலைகளுக்குள் சென்று கசப்புடன் திரும்பிய அனைவருக்கும் சொந்தமே.

ஆசிரியர்கள் நம் சமூகத்தின் பெரும் வரலாற்றுப் பாத்திரம் உடையவர்களே. எல்லா வகையிலும் கல்வி என்பது அவர்களின் கைகளில் இருக்கும் எத்தனை வலிமை வாய்ந்த ஆயுதம் என்பதை உணராதவர்களாக, சமூக மாற்றத்தை விரும்பும் ஆசிரியர்கள் கூட அதன் அருமை தெரியாதவர்களாக இருப்பதுவே பெரும் சோகம்.

மனிதன் வரலாற்றுக்குரியவன். நிகழ், கடந்த, எதிர் என அனைத்துக் காலங்களும் அவனுக்கே உரியவை. சமூகத்தில் நிலவும் அனைத்து அநீதிகளையும் எதிர்ப்பவன். இதில் அவனுக்கு கொடுக்கப்படும் கல்வி மிக முக்கியமானது ஆகும். அது மிக விழிப்புணர்வும் விமர்சன்ங்களும் கொண்டதாக அமைய வேண்டும். சமூகத்தில் உள்ள மூடநம்பிகைகள், கருத்தாக்கங்கள், சந்தேகங்கள், சவால்கள், ஏற்றத் தாழ்வுகள் என அனைத்தும் கல்விப்பொருளாக வேண்டும். இக்கல்விதான் மக்களை விடுதலை செய்யும் கல்வியாகும். இத்தகைய வெளிச்சத்தில் இருந்து தான் சமூக மாற்றத்தின் கூறுகளை நாம் பெற முடியும்.

பாவ்லோ பிரையர் கேட்கும் கேள்வி களைத்தான் என்றோ இந்த கல்வியால் ஜாதி ஒழியுமா என்று கேட்டார் அம்பேத்கார். நிச்சயம் இந்தக்கல்வி முறையை இன்னும் நூறு ஆண்டுகள் நாம் பயின்றாலும் ஜாதி ஒழியப் போவதில்லை என்பது தான் பதில். ஜாதிகள் இல்லையடி பாப்பா என்பது இரண்டு மார்க் கேள்விக்கான பதில் என்று மட்டும்தான் இந்தக் கல்வித் திட்டம் நமக்கு கற்பித்திருக்கிறது. நாம் கற்பதற்கும் வாழ்க்கைக்கும் ஒரு பள்ளத்தாக்கு இடைவெளி இருப்பதை ஒவ்வொரு நடைமுறையும் நமக்கு உணர்த்திக் கொண்டேயிருக்கிறது.

அவ்வளவு ஏன் நம் கல்வியில் இன்றைய சமூக வாழ்வில் உள்ள எத்தனை தீங்கான நடைமுறைகளின் மீது விமர்சனங்கள் உள்ளது என்று நீங்களே ஆராய்ந்து பாருங்களேன். கல்வி நம்மை நவீன மனிதர்களாக மாற்ற வேண்டும். ஆனால் அது அவ்வாறு செய்யாமல் நம்மை ATM மிஷின்களாக மாற்றுகிறது. நம் முதன்மைக்குறிக்கோள் மனிதனாக மாறுவது அல்ல மாறாகப் பொருள் ஈட்டுவதே.. நீங்கள் தொடர்ந்து பொருள் ஈட்டிக்கொண்டே மனிதராகவும் வாழ முயற்சித்து 99% தோல்வியைத்தான் தழுவுவீர்கள்.

அதிகம் படித்தவன்தான் அதிகப்படியான சுயநலவாதியாக உருவாகிறான். மனிதனாக இருப்பதற்கு அளவான சௌகர்யங்களும், அத்தியாவசியங்களும் போதுமானது என்றே பல நேரங்களில் வாழ்க்கை நமக்கு உணர்த்திக் கொண்டேயிருக்கிறது. ஆக கல்விச்சாலைகளின் இன்றைய முதன்மை நோக்கம் அந்த அந்த நாடுகளின் உற்பத்தி முறைகளுக்கு *(Modes of Production)* ஏற்ப அதற்கான இயந்திரங்களின் உதிரிப் பாகங்களைப் போல் அதன் முதன்மைக் கச்சாப்பொருளான கேள்வி கேட்காமல் உழைக்கும் மனித இயந்திரத்தை உருவாக்குவது மட்டுமாகச் சுருங்கிப்போனது.

இதுபோன்ற சம்பாதிக்கும் மனித இயந்திரங்களை உருவாக்குவதுதான் தமது தலையாய கடமையாகப் பெற்றோர்களும் செயல்படுகிறனர். நமது எதிர்காலப் பொருளாதாரத் தேவைகளைக் காரணம் காட்டியே சமூகத்தை நேசிக்கும் மனிதர்களை உருவாக்காமல் பணம் பண்ணும் மிசின்களை மட்டுமே உருவாக்கிக் கொண்டுள்ளோம். கற்றல் என்பது வேலைக்கான துருப்புச்சீட்டு என்ற நிலை என்றைக்கு மாறுகிறதோ அப்போது தான் கல்வி என்ற உன்னதமான கருத்தாக்கம் முழுமையடையும்.



# பாபநாசம் 3 கோணங்கள்

**படமும் 'விசாகா சிங்கின் பதிலடியும்' – பரிமளராசன்**

பாபநாசம் இப்படத்தின் மூல கருவே, ஒரு பெண் குளிக்கும் போது அதனைப் படம் எடுத்த ஒருவன், அந்தப் படத்தை இணையத்தில் போட்டுவிடுவேன் என மிரட்டுவதும், அவன் மிரட்டலைக் கேட்டு பயந்த அப்பெண்ணின் தாயும், அவரும் அப்படத்தை இணையத்தில் போட்டால் எங்கள் 'மானம் போய்விடும், குடும்ப கௌரவம் சிதைந்துவிடும், நாங்கள் உயிரோடு இருக்க முடியாது' எனக் கண்ணீர் விட்டுக் கதறி அழுவதுமே ஆகும்.

இதற்கு பதிலாக "அடப்போடா மயிறு, உன் தாயாருக்கும், உன் தங்கை, அக்காவுக்கும் இருக்கும் உறுப்புகள்தாண்டா எனக்கும் இருக்கிறது. இணையத்தில் போட்டால் மயிராச்சு. போய்ப் போடுடா" எனச் சொல்லி இருந்தால் இந்தப்படம் அதற்கு மேல் நகராது 20 நிமிடத்தில் முடிந்திருக்கும்.

தேவைப்பட்டால் சட்டப்படி அவனைக் கடுமையாகத் தண்டிக்க வழி உண்டு. சட்டப்படியோ, நியாயப்படியோ அவனை நிதானமாகத் தண்டித்துவிடலாம்.

ஆனால் அப்படி அவர்கள் சொல்லாமல் கலாச்சாரம் பண்பாடு தடுக்கிறதாம். அவன் காலில் விழுந்து கெஞ்சுகிறார்கள். அவன் நோக்கம் மோசமானது. அவன் செயலுக்கு இவர்கள் வலுசேர்க்கிறார்கள். இதனை அப்படம் நியாயப்படுத்துகிறது. இது மிகவும் பிழையானது பிற்போக்குத்தனமானது.

செல்போன்களும் இரகசியக் காமிராக்களும் நாளுக்கு நாள் பெருகி வரும் நிலையில் இது போன்ற விபத்துக்கள் இனி யாருக்கும் நேரலாம். அப்படியான மிரட்டல்களை உதாசீனப்படுத்தி அதனை எப்படி எதிர்கொள்வது என்கிற மனநிலையை உருவாக்குவதே சமூக அக்கறை உள்ள சிந்தனையாக இருக்க முடியும்.

சில நாட்களுக்கு முன்பு நடிகைகள் என சொல்லப்படுபவர்கள் குளிக்கும்போது எடுக்கப்பட்ட படங்கள் இணையத்தில் உலா வந்த பிறகு அந்த நடிகைகள், அவர்களின் குடும்பங்கள் என்ன தற்கொலை செய்து கொண்டார்களா? மானம், குடும்பகௌரவம் கெட்டுவிட்டது என ஒப்பாரி வைத்தார்களா? அவர்கள் அதனை உதாசீனப்படுத்திவிட்டுக் கடந்து செல்லவில்லையா?அந்த மனநிலைதான் சரி.

சமீபத்தில் முகநூலில் விசாகா சிங் எனும் நடிகையின் உடல் உறுப்பை அவரின் முகநூல் பக்கத்திலேயே ஆபாசமாகக் கிண்டல் செய்த ஒருவனுக்கு அவர் அளித்த பதிலைப்பாருங்கள். இந்த மனநிலையை வளர்த்தெடுப்பதே இன்றைய சூழலுக்கு சரியானது. பாபநாசம் ஆரம்பமே தப்பு, அப்புறம் தப்பு மேல தப்பு........

**மக்களின் மனஓட்டத்தைப் பேசும்படம் – பூமணி**

பொதுவாக முற்போக்காளர்கள் பெண் விடுதலை தளத்தில் பணிபுரிபவர்கள்- சாதி ஒழிப்பாளர்கள் - தன்னார்வத் (நிறுவன) தொண்டர்கள் ஆகியோர் சமூகத்தில் களமாடும்போது தங்களுக்குள் ஆண்கள் ஆண்களிடம் பெண்கள் பெண்களிடமும் மட்டுமே நட்புக்கொள்ள முடிகிறது. எடுத்துக்காட்டாக ஒரே அறையில் தங்கும் சூழலில் கூட தோழமையோடு தங்க முடியவில்லை.

மேலும் ஒரு பெண் தோழர் ஆண் தோழர்கள் இருக்கும் போது அந்த இட த்தில் அந்தப் பெண் சுதந்திரமாகத் தன் உடலை தன் விருப்பப் படி போட்டு உறங்க இயலவில்லை. இதை நான் குற்றமாகக் கூறவில்லை. நடைமுறைச் சிக்கலை பேச வேண்டியதுள்ளது. அந்த இட த்தில் நமக்குள் சில மனச்சிக்கல் உள்ளது. அத்தகைய மனச்சிக்கல் ஆணிடமும் பெண்ணிடமும் உள்ளது. இப்பவும் முற்போக்குப் பணியாளர்கள் ஆண்கள் ஆண் தோழர்களிடம் சுதந்திரமாக நட்பாகப் பழகுவதைப் போன்று பெண்கள் ஆண் தோழர்களுடன் சுதந்திரமாக நட்பாகப் பழக இயலாத நிலை உள்ளது.

ஆக, முற்போக்காளர்கள் மத்தியிலேயே இத்தகைய மனரீதியிலான இடர்பாடுகள் இருந்து கொண்டுதான் உள்ளன. இது படிப்படியான மனமாற்றங்கள் மூலமாக மட்டுமே மாற்றத்திற்கு உட்படும். ஏனெனில் சாக்கடையான இந்தச் சமூகஅமைப்பில்

இருந்துதான் நாமும் வருகிறோம். எண்ணிலடங்கா நூல்களை வாசித்தாலும் ஆயிரம் மேடைகளில் ஆவேச முழக்கம் எழுப்பினாலும் நமது முற்போக்கு மனங்களிலும் பெண் என்ற பிம்பம் பற்றிய உருவாக்கம் (சமூகம் கட்டமைத்த) நம் மனதிலும் ஒட்டிக்கொண்டு தான் உள்ளது.

பெண்ணை பொருளாக, அழகியலாக, கவிதையாக, அன்பாக, பாசமாக, காதலாக, நேசமாக, மோகமாக.. இத்தகைய பிம்ப உருவாக்கங்களின் எச்சசொச்சங்கள் நம் ஆழ் மனதிலும் நம்மை அறியாமலேயே ஒட்டிக்கொண்டுள்ளன. அதனை அடையாளம் காண்பது இருப்பதை ஒத்துக் கொள்வது களைவதற்கான வழிமுறைகளை மேற்கொள்வது மனமாற்றம் கொள்வது. இது ஒரு படி நிலை. சரி, நாம் பாபநாசத்திற்கு வருவோம்.

ஒரு படத்திற்கு கதைக்களம் முக்கியமானது. சாராசரி குடும்பம் - அமைதியான வாழ்க்கைச் சூழல் - எதிர்பாராத நிகழ்வு - அலைபேசி வீடியோ காண்பித்து மிரட்டல் - மகளுக்கு பதில் அம்மாவைக் கோருவது - உணர்வு நிலையில் மண்டையில் அடிப்பது - எதிர்பாரா மரணம் (திட்டமிட்ட கொலையல்ல) அப்பா தனது சினிமா மூளையால் திறமையாக குடும்பத்தைக் காப்பற்றுவது. இத்தகைய கதைக்களத்தில் அந்தக்குடும்பம் எப்படி முற்போக்காக துணிவுடன் நடக்க முடியும். நடைமுறை எதார்த்தை பாபநாசம் பிரதிபலிக்கிறது.

படத்தை விமர்சிக்கக்கூடிய முற்போக்காளர்கள் தங்களது களங்களில் செய்ய இயலா நிலைப்பாட்டை கமல் எடுக்கவேண்டும் என்பது என்ன நியாயம் ? நமது கனவு கம்யூன் வாழ்க்கையாக இருக்கலாம் ஆனால் நடைமுறை யதார்த்தத்தை மீறி நாம் மட்டும் கனவு கண்டு என்ன பயன் ? படம் பயணிக்கக்கூடிய போக்கு அப்படிதான் இருக்கும். இன்றைய தினம் அலைபாயக்கூடிய கூட்டம் தங்களது மனநிலை ஒட்டத்தைப் படம் பேசுவதால் தான் விரும்பி பார்க்கின்றனர்.

மேலும் பாபநாசம் படத்தைப் பொறுத்தவரை கதை ஏற்கனவெ நமது துப்பறியும் எழுத்தாளர்கள் எழுதிய கதை தான். இதில் முக்கியமானது திரைக்கதைதான். துப்பறியும் நாவலைக் காட்சிப் படிமானங்களோடு படமாக்கிய விதம் அருமை. எனவே விமர்சிக்கும் நண்பர்கள் தங்களால் நிறைவேற்ற முடிவதை மட்டுமே பிறரிடம் எதிர்பார்ப்பது நாணயமான செயல்பாடாகும்.

**பேய்ப்படங்களின் தொடர்ச்சியே பாபநாசம் - கமலன்**

பாபநாசம் படத்தைச் சமீபகாலமாக வெளியாகிக் கொண்டிருக்கும் பேய்ப்படங்களின் தொடர்ச்சியாகவே பார்க்கமுடிகிறது. பொதுவாகப் பேய்ப்படங்கள் குழந்தைகள் மனதிலும், இளம்பருவத்தினர் மனதிலும் ஏற்படுத்தும் ஒரு அச்ச உணர்வு அவர்களது மரணம் வரை அவர்களைத் துரத்திக்கொண்டுதான் செல்கிறது. அவர்களை மட்டுமல்ல அவர்களது சந்ததியையும் சேர்த்து மிரட்டி வைக்கவும் செய்கிறது. கடவுளுக்குப் பயப்படாத சிலர்கூட பேய்களுக்குப்பயப்படுவதை நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

கடவுள், பேய், பிசாசு, இரத்தக்காட்டேறி, ஏவல், பில்லிசூனியம் போன்றவை குறித்த அச்சங்கள் சமுதாயத்தில் இயல்பானவைதான். எனவே அந்த இயல்பான மனநிலையை விளக்கும் படங்கள்தானே பேய்ப்படங்கள் என்ற ஒரு வாதத்தை, ஒரு பேய்ப்பட இயக்குநர் வைத்தால் அது சமுதாயப் பொறுப்புள்ள விளக்கமாகுமா?

அதுபோல மாணவிகள், இளம்பெண்கள் - செல்போனைப் பயன்படுத்துவது, ஆண் மாணவர்களுடன் பழகுவது, அவர்களுடன் கல்விச்சுற்றுலாக்கள், கல்லூரிகளுக்கிடையே யான போட்டிகளுக்குச் செல்வது, மாணவர் முகாம்களில் பங்கேற்பது, தொழில்ரீதியான சுற்றுலாக்கள் செல்வது போன்றவற்றிற்கு இந்தச் சமுதாயத்தில் இருக்கும் தடைகளை நாம் அறிவோம். இதுபோன்ற சந்திப்புகளுக்கு மாணவிகளை, இளம்பெண்களை அனுப்பு வதற்கு பெற்றோர்கள் காட்டும் தயக்கங்களை நாம் அறிவோம்.

அந்தத் தயக்கங்களையும், தடைகளையும் நியாயப்படுத்தும் விதமாக, இன்னும் ஓங்கி உறுதிப்படுத்தும் விதமாகவும்தான் பாபநாசம் வெளியாகியுள்ளது. ஒரு போய்ப்படம் உருவாக்கும் அச்சத்தைவிட, கோழைத் தனத்தைவிடக் கொடுமையானது இந்தப் பாபநாசம்.

பாலியல் சீண்டல்களுக்கு ஆளாகும் பெண்கள் அந்த இடத்திலேயே அதை எதிர்த்துப் போராடவும், சட்டம் வரும் வரை காத்திருக் காமல் அதிரடி நடவடிக்கை எடுக்கவும், சமுதாயத்தின் பொதுப்புத்தியின் விமர்சனங்களைத் தூக்கி எறிந்துபோகவும்- பழக்கப்படுத்தும் நோக்கில் படங்கள் வெளியாக வேண்டும். ஏற்கனவே சமூகத்தில் நிலவும் பிற்போக்குத்தனங்களை நியாயப்படுத்தும் படங்களைப் புறக்கணிக்க வேண்டும்.



*அய்யப்பனை நம்பிக் கேரளாவுக்குப் போகும் பக்தர்களே, தமிழ்நாட்டுக் கடவுள்களை என்ன செய்யலாம்?*





# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

## விளம்பரம் மற்றும் ஆண்டுச்சந்தா

அட்டை பலவண்ணத்தில்:

| | |
|---|---|
| பின்பக்க அட்டை : | 5000.00 |
| முன் அட்டை உள்பக்கம் : | 3000.00 |
| பின் அட்டை உள்பக்கம் : | 3000.00 |
| அட்டை உள்பக்கம் 1/2 பக்கம் : | 1500.00 |

ஏட்டின் உள்பக்கம் கருப்பு வெள்ளை:

| | |
|---|---|
| 1 பக்கம் : | 1500.00 |
| 1/2 பக்கம் : | 750.00 |

விளம்பர தொடர்புக்கு:
பல்லடம் சி.விஜயன் 99427 30983
ஜீவாநகர் குமார் 99944 77013

ஆண்டுச்சந்தா : 200.00
தொடர்புக்கு:
வழக்கறிஞர் கிருட்டிணக்குமார்
97882 97428


ஆக்கங்கள், விமர்சனங்களுக்கு: காட்டாறு, 1/810, முத்தமிழ்நகர், நத்தம்சாலை, திண்டுக்கல். 624 003 kaattaaru2014@gmail.com